மனையடி சிற்ப சிந்தாமணி

(வீட்டு நிலைய நூல்)




— 1977 —

என். கே. சுப்பிரமணியம்

மனையடி சிற்ப சிந்தாமணி

(வீட்டு நிலைய நூல்)



ஆக்கியோன்:

என். கே. சுப்பிரமணியம்

பிங்கள வருடம் 1977

முதற்பதிப்பு: ஆடி 29, 1977

அச்சுப்பதிப்பு: விநாயகர் பிறிண்டிங் வேக்ஸ்,
ஏழாலை.

வண்ணை நகர் — யாழ்ப்பாணம்

ஆகமப் பிரவீண

பி. பா. பஞ்சாக்ஷரக்குருக்கள் ஜே. பி.

அவர்கள் வழங்கிய

மதிப்புரை

ஆண்டவன் படைப்பில் தேவர்கள் முதலாகவும், மக்கள் இரண்டாவதாகவும், மற்றவை படிப்படியாக அறிவில் குறைந்தவைகளுமாவன.

மக்கட்பிறவியில்பிரமச்சரியம்,கிரகதாஸ்ரமம்,வானப்பிரஸ்தம், சந்நியாசம், எனநான்கு பகுப்புக்கள் இந்நான்கிலும்இரண்டாவதானகிரகதாஸ்ரமமே மேலானது. கிரகதாஸ்ரமம் இதனைப்பற்றி வடமொழியில் குணுனு பந்தரூபேணுபசு, பத்தினி, சதா, லயா என்ற வாக்கியப்படி பூமியிலுள்ள இல்லறத்தவர்களுக்கு பூர்வஜென்மத்தில் செய்துகொண்ட புண்ணியத்தின் அளவாய் பசு, பத்தினி பிள்ளை, வீடு முதலியன அமைவதாகும். அவை நல்ல குணம், லக்ஷணம், பதிவிருத்தம், ஒழுக்கம், சற்புத்திரம் அளவுப்பிரமாண சாஸ்திரவிதி முறைப்படி அமைதலாகிய சுகுண லக்ஷணங்களையுடையதாய் இருந்தால் மாத்திரம் இவர்களுக்குக் குறைவின்றி நிறைவான பெறுபேறுகளுடன் தனு, கரண, புவன, போகங்களை இம்மையிலும்

மறுமையிலும் பயனை அடைய முடியும். அறம், பொருள் இன்பம், வீடு என்பவை நல்ல சுகுண லக்ஷணங்களுடன் அமைய முயற்சிப்பது ஒவ்வொருவருடைய முதற் கடமையாகும்.

அத்தன்மையான பசு, பத்தினி, பிள்ளை இம் மூன்றையும். அனுபவிக்க வீடு முதற்காரணமாயிருக்கின்றது. வீடுமாத்திரமன்றி நீர்நிலையமான கிணறும் உரிய இடத்தில் விதிமுறைப்படி அமைதல் அமைக்க வேண்டும். அளவு கணக்கு விதிமுறைப்படி லக்ஷணங்களோடு கூடிய வீட்டுடன் கிணறும் அமைந்த வீடுகளில் வசிப்பவர்கள் உரியவர்கள், கஷ்ட நஷ்ட இன்னல்கள் அணுகாமல் லக்ஷ்மி கடாட்சத்துடன் பரம்பரையாய் சுகமாய் வாழ்ந்து கொண்டிருப்பதை விசேஷமாய்க் காணலாம. அவையின்றிப் பேதமாயும், குத்தலாகவும், உரிய இடத்தில் நீர்நிலையமமையாமலும் உள்ளவீடுகளில் வசிப்பவர்களும் உரியவர்களும் துன்பம், இன்னல், இடைஞ்சல், பிணி பீடை, சந்ததியின்மை அலக்ஷ்மித்தன்மையடைந்திருப்பதைப் பார்த்தும் கண்டும் வருகின்றோம். இவ்விதமான தோஷங்கள் மக்களனைவரையும பாதிக்காமல் நல்வாழ்வு வாழச் சிவபிரான் ரிஷிகளுக்கு உபதேசித்ததை உலகைச் சிருஷ்டித்து உய்யவைவ அவதரித்த பஞ்சபிரம்மாக்களான (பஞ்சகம்மாளர்) மனு, மயன், துவஷ்டா, சிற்பி, விஸ்வக்ஞன ஆகிய ஐவரும் வடமொழியிலும், தமிழ்மொழியிலும் திருவாக் கருளியவைகளை மேலப்பாய் தெற்கு. ஸ்ரீ குமாரசாமி குமாரன் சுப்பிரமணியம் அவர்கள பலப்பல சிற்பமனையடி சாஸ்திர நூல்களையும் ஏடுகளையும ஆராய்ந்தும், பல மனையடி சாஸ்திர விற்பன்னர்களையும், அனுபவமிகுந்து தெளிந்தவர்களுடன் ஆராய்ந்தும், மேல் புலமை கருதி தஞ்சைசரஸ்வதி நூல் நிலையத்திலும் பல நூல்கள், ஏடுகளையும் ஆராய்ந்தும், ஐயந்திரிபுறத்தெரிந்தும் ஆசிகளைப்பெற்றும், அவர்களால் கணித்து எடுக்கப்பட்ட வீடுகளையும் பலன்களையும் அவ்விதமமையாது பேதமாய் கட்டப்பட்ட வீடுகளின் பலன்களைக் கண்டும் கேட்டும்

யாழ்ப்பாணம்

தனது ஆய்ந்த ஆராய்வின் பயனால் திருத்தம் செய்வித்தும் பின் அவைகளின் பலன்களைக்கண்டு சிறந்தும் தனது ஆராய்ச்சிமிக்க சாரங்களை ரசங்களைத் தொகுத்து விஞ்ஞான முறைப்படி இலகுவில் இல்லறத் தர்மப்பெருமக்களனைவரும், வீடுகட்டும் ஆசாரியார்களனைவரும், வீட்டு நிலம்வகுப்பவர்களும் எளிதில் அறிந்தும் தெரிந்தும் ஆற்றத் தக்கதாகவும், ஆக்கந்தக்கதாகவும் சிற்ப நுட்பநுணுக்க விதிமுறைக் கணக்குத் தவறாத வகையில் ஆக்கம் பெற்று "மனையடி சிற்ப சிந்தாமணி" என்ற நூலாக வெளிவந்திருப்பது வேண்டியவர்கள் வேண்டியவாறு அனுபவிக்க. ஆற்ற, ஆக்க, உய்ய உய்விக்கத்தக்க மகத்துவ நூல். இதுவரை இவ்விதமான தெளிவான அரியநூல் தமிழ்நாட்டிலும் நம்நாட்டிலும் நான் அறிந்து படித்தவகையில் இந்நூல் போன்று வெளிவரவில்லை. அனைவரும் பெற்று பயனும பலனும் அடைந்து ஆக்கியோனைப் பாராட்டியும், வாழ்த்தியும், நல்வாழ்வு வாழ்வோமாக!

ஓடை ஒழுங்கை,
வண்ணைநகர்,
யாழ்ப்பாணம்.

பி. பா. பஞ்சாக்ஷரக்குருக்கள்
(சமாதான நீதிபதி)

செந்தமிழ்ச் சிரோமணி பண்டித வித்துவான்
திரு. க. கி. நடராஜன் B. O. L, Dip. in Ed.
அவர்கள் வழங்கிய

வாழ்த்து

சோதிட மெனும் மேதகு கலையில்
நாட்டுள மக்கள் நன்கனம் உணர
வீட்டு நிலைய விற்பனம் விளம்பினர்
சிலரே யாக, அவரினுஞ் சிலரே
நலமுறு நூலினை நமக்களித் துள்ளனர்;
தூயமூ தாதையர் சொற்ற முறையினின்
மேய இலக்கணம் விளங்கவுந் தெளியவும்
பற்பல நூல்களைப் பணிவுடன் ஆய்ந்தவன்;
நற்குண நலனும் நலதரு பக்தியுங்
கொண்டவன்; சோதிடன்; தொண்டுளம் படைத்த
கொழிதமிழ்ப்; புலவர்கள் வழிவழி ஓங்கும் [வண்
தாவஅச் சிறப்பின் நவாலியம் பதியிற்
குமார சுவாமிக் கோன்சிவ காமிப்
பிள்ளையென் றிவர்கள் பெறுதவப் புதல்வன்;
வானுயர் சோலை வளமதி செல்வ
மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன்;
பரமேஸ் வராக்கல் லூரி யதனினும்
திரமுறப் பயிற்சி பெற்றவன்; சீரியன்;
இன்றமிழ் ஆங்கிலம் இனிதே பயின்றவன்;
நன்னீர் ஊற்றை இன்னிதின் உணரும்
தங்கேஸ் வரிப்பெயர்த் தையலை மணமயர்ந்
திங்கித வாழ்க்கை எழிலுற நடாத்தி
ஊருணி நீர்நிறைந் தாங்கிவ் வுலகில்
இல்லம் அமைக்கும் செல்வாக் கமைந்த
மக்கட் கெல்லாம் வளமனை வகுத்தும்
பக்கத் துணையாப் பலபணி யுருற்றியும்

இக்கலை வல்லவன்; எவர்க்கும் நல்லவன்;
வாக்கு வன்மையும் நோக்குறு கேண்மையும்
தேக்க வாழ்ந்திடுஞ் செம்மையன்; இந்நாள்
இத்துறை நூல்கள் மெத்தக் குறைவாம்
அத்தகு நிலையினை அறிந்து நீக்கச்
சிற்பசிந் தாமணிச் சீரிய நூலைப்
பொற்புடன் சிறக்கப் புகழுற வியற்றினன்;
இல்வாழ் வோர்க்கெலாம் நல்வாழ் வளிக்க
ஒல்லையின் உதவும் சொல்லமை நூலில்
புதியவர் கூறும் கொள்கையும் புகுத்தினன்;
முதியவர் கூறும் மூதுரை செறித்தனன்;
இந்நன் னூலை எவரும் பெற்று
நன்னலம் பெருக நயப்பது கடனே.

வெண்பா

அழகுடனே செல்லமலி வீடமைக்க ஆன்ற
பழகுதமிழ் நூல்தந்த பண்பன் - செழுமையுடன்
சுப்ரமண்யப் பேர்பூண்ட தூயன் அநுதினமும்
இப்புவியல் வாழ்க இயைந்து.

ஓங்கிடுக யாண்டுபொருள் ஒன்றுபல வாயிடுக
தேங்கிடுக இல்லறத்தே தேனின்பம் - பாங்குதமிழ்
அன்னையின் இன்னருளால் ஆனபல நூல்யாத்து
நன்னயமாய் வாழ்ந்திடுக நன்று.

யோகபவனம்', க. கி. நடராஜன்
வண்ணைநகர்,
21-7-77

வல்வெட்டித்துறை

பண்டிதர் சங்கர - வைத்தியலிங்கன்

அவர்கள் வழங்கிய

வாழ்த்து

புலவர்களும், கற்றபெரும், குரவர்களும்,
மலிதலினல், போற்றப், பெற்ற
நலமலியும், பேருராம், நவாலியினில்,
வரும்பெரிய, நன்மை, பெற்றேன்
குலமலியும், குமாரசா, மிப்பெரியோன்,
திருமைந்தன், குணக்குன், றேனென்
கலைமலிசுப், பிரமணியம், மனையடிநன்,
காராய்ந்தோன், கவிஞர்ந், தோன் தான்,
மனையடிநூல், சிற்பநூல், வல்லார்கள்,
மகிழ்வனவாம், மாட்சிசித் தாய
எனைபொருளும், எளிதாக, எல்லாரும்,
விளங்குவகை, இனிது, தந்தான்
மனையடிசிற், பச்சிந்தா, மணியென்னப்,
பேர்கொண்ட, மானூ, லைத்தான்
இனையஒரு, நூல்செய்தாற், கெல்லோரும்,
நன்றிசெய, இயலு, வோமே.
மனையிலுள, கிணற்றுக்கு, மாட்சிதரு,
நிலையத்தை, மயக்க, மின்றி,
அனைவருமே, மகிழ்வகையால் ஆக்கவல்லார்,
ஆசிரியர், மனேக்கி, மூத்தி,
மனைநலஞ்சேர், கோப்பாயில், தங்கேசு,
வரியென்னும், மாது, தானே
இனையவர் சேர்ந், தியற்றியதாம்,
இந்நூலை, எல்லோரும், ஏத்துவோமே.

தெளி,
வல்வெட்டித்துறை.
25-7-77

சங்கர - வைத்திலிங்கம்

பொன்விழாக்கண்ட இடைக்காடு மாவித்தியாலயத்தின் முதல் அதிபரும், திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை விரிவுரையாளரும், ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத் தேர்வாளரும், மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதரும், முதுபெரும் புலவரும், இடைக்காடு தமிழ்மன்றத் தலைவருமாகிய பண்டிதர்

உயர் திரு. சு. இராமசாமி அவர்கள் வழங்கிய

வாழ்த்து

திசையளந்த பெரும்புலவர் திருச்சோம சுந்தரனார்
இசையமைந்த மருமகனின் மகனாகி எவரெவர்க்கும்
நசையனைந்த கலைவாணன் நலமளிக்கும் எண், ஞானம்
வசைதவிர்ந்த சோதிடமும் சிற்பமுமாம் வகைதெரிந்
தோன்

மனையடிசேர் சிற்பசிந்தா மணிநூலை வரைந்தளித்தோன்
தனைநிகர்வோர் அரிதான தகுபட்ட முடையோனல்
புனையுமிசைப் பரமேசு வரக்கழகப் புகழ்மானி
வனைந்தபுகழ்க் குமாரசு வாமிக்கு மகனானேன்

கலைநிரம்பும் தமிழ்த்தஞ்சைக் கண்ணமைந்த ஏடகத்துத்
தலைசிறந்த சோதிடநூல் பிறதுருவித் தகையமைந்தோன்
நிலையுயர்ந்த நன்னீர்தேர் பனைவிளையக்கொள் நீள்தவத்
தான்
விலைதெரியாப் பெயர்சுப்ர மணியமெனும் விறலோனை

கண்ணீர்மை பெரிதமைந்து கலைகளிலும் நிறைவுடை
யாள்
தண்ணீர்மை முழுதமைந்த தங்கேசுவரிப் பெயராள்
நன்னீரின் இருப்பிடத்தை உவர்நிலத்தும் நன்கறியும்
சொன்னீர்மை மிகுங்கணித சோதிடமும் தெரிந்துள்ளாள்

பொன்னனைய தங்கேசுவரி, கணவர் பொன்னென்ன
நன்னருறும் தமிழ்மொழி யொடாங்கில மும்நன் குணர்ந்த
மன்னுலகிற் பெயர் சுப்பிரமணியமிவர் வனம்பொருந்த
பன்னுபுகழ்த் தொழில்செழித்தே பலகாலம் வாழியரோ.

25-7-77

சு. இராமசாமி

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
13	6	கிழக்கித்	கிழக்குத்
14	9	திருமுக	திரியமுக
14	11	பூகினி	பூசினி
27	20	அ. செ. கெ. பி	அ. செ. கை: பி
30	4	திரியமுக	திரீயமுக
60	15	பெறுவதென்ன	பெறுவதென்ன,?
40	1	மடைபள்ளி	மடைப்பள்ளி
40	27	வீட்டுகுள்	வீட்டுக்குள்
41	13	கூடாதென	கூடாது.
41	16	விட்டுமுகடு	வீட்டின்முகடு
48	30	பல்லுண்டாகும்	பலனுண்டாகும்
58	21	பாலிக்மென	பாலிக்குமென
58	22	விஸ்வகாம	விஸ்வகர்ம
58	21	பிரகாகிகை	பிரகாசிகை
61	13	பட்டைக்	பட்டை,
62	14	சிவந்த	சிவத்த
62	10	இருப்பவர்களை	இருப்பவர்கள்
73	10	9வது	2வது
77	9	வது	9வது
81	17	21¼குழி	21குழி
82	24	சுழல்	தழல்
82	24	இருள்	உருள்
92	1, 3, 13	மங்கள	மங்கல
93	3	வைத்தியர்	வைத்தியர் வீடு
93	24	எப்படிதோ	எப்பதோ கட்டின
94	26	இலக்கணக்	சில்லறைக்
94	27	தி	திரு

உ

சிவமயம்



மனையடி சிற்ப சிந்தாமணி

துதி

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஓம் சிவ முருகா போற்றி

கரிமா முகதேவா யெனைக்காரும் மலர்ப் பாதா
திரிகாலமு மறிந்தே யுரை செப்பும் வரமேதா
துரியாதீத முறையும் பரசோதி கணநாதா
சிறியேன் தமிழது கூறிட சித்தியளி போதா.

நாரணி யாள் சுதனே குறநாரி தனை மருவும்
பூரணனே மால்மருகா புவியோர்க்கருள் புரியும்
காரணனே முனிவர்களும் கவிஞர்களும் கருதும்
ஆரணனே குருவாக வென்னகமீ தினி லமரும்.

பார்வதியே கவுமாரி பங்கயந்தி சிற்பரையே
சீர்மிகுந்த வாடைபுனை தேவியே—வார்சடையான்
வாமமதில் வாழுகின்ற மங்களேஸ் வரியேயுன்
நாமமதா னூலுரைத்தேன் நான்.

தாரணி யதிலேயுள்ள சற்குண புலவருக்கும்
சீரது வளித்த செல்வி திசைமுக னுவில் வாழும்
காரணி கமலை வாணி கையில்யாழ் மறையைத் தாங்கும்
சாரதாவம் பாளுன்ருள் தலைமிசைத் தாங்கினனே.

செங்கதி ரம்புலி சேய்புதன் ஜீவன் செழும்புகரோன்
பங்கர வஞ்சிகியாம்நவக் கோள்களும் பண்புபெற
மங்கள மைந்தரும் வாழ்வுடன் சீரும் மலிவயசுந்
தங்குநற் செல்வமுந் தந்தருள் வீர்தந்தி மாமுகனே.

உ
சிவமயம்

பூப்பரீட்சை

தேவர்கள், மனிதர்கள், வாழும் இடங்கள் வஸ்து எனப்படுகின்றன. வாஸ்து சாஸ்திரமறிந்தவர்கள் பூமியைப் பின்வருகின்ற முறைகளினுல் சோதித்துப்பார்த்துத் தகுதியுள்ள பூமியை எடுப்பார்கள்.

நிறம், மணம், சுவை, உருவம், திக்கு, சப்தம், ஸ்பரிசம், தூளி முதலியவைகளினுல் பூமியைச் சோதித்துத் தகுதியான பூமியை எடுத்தல் வேண்டும்.

நிறம்

வெள்ளை, பொன்னிறம், சிவப்பு, கருமையென நான்குவித பூமிகள் உள. அக்காலத்தில் வெள்ளை நிறமானது வேதியருக்கும், பொன்னிறமானது அரசனுக்கும், சிவப்பு நிறமானது வைசியருக்கும், கருமை நிறமானது வேளாளருக்கும் என விதிக்கப்பட்டுள்ளது.

மணம்

பால், மலர், கிழங்கு, நீர் மணத்தையுடைய பூமியை நான்கு வருணத்தவருக்கும் வீடு கட்டுவதற்கென விதிக்கப்பட்டுள்ளது.

புன்னை, ஜாதிமுல்லை, தாமரைப்பூ, தானியம், பாதிரிப்பூ, பசு இவைகளின் மணமுடைய பூமி விசேடமானது.

தயிர், நெய், தேன், எண்ணெய், இரத்தம், மயிர்ச்சிக்கு, மீன் முதலியன போன்ற மணங்களையுடைய பூமிகள் வீடுகட்ட விலக்கப்பட்டன.

சப்தம்

குதிரை, யானை, மூங்கில், வீணை, சமுத்திரம், துந்துபி வாத்தியம் இவைகளுடைய சத்தம் போன்று வெட்டும் பொழுது கேட்டல் வேண்டும். இந்தப் பூமி விசேடமானது.

ஸ்பரிசம்

தொட்டுப்பார்த்து அறிதலைக் குறிப்பது. இதில் பசைத்தன்மை, தூசி, சொரசொரப்பு முதலியவைகளை தொட்டுப்பார்த்து அப்பூமியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

தூளி

உலர்ந்த காலத்தில் பூமியின் ஒரு பிடி மண்ணை எடுத்து கசக்கிப் பிசைந்து கிழக்கு, அல்லது வடக்கு முகமாக நின்று ஊதியெறிந்து தூசி, மண், இவைகளின் விகிதத்தை அறிவது.

உருவம்

பன்றி, பாம்பு, சுளகு, உரல், மணி, பல்லி, ஓந்தி, குரங்கு, பூனை, சங்கு, ஓணன், மீன், முறம், கோடரி, உளி, பிரணவத்தின் வடிவம், பக்ஷியின் வடிவம், பேரிகையின் வடிவம் இவைபோன்ற உருவங்கள் விலக்கப்பட்டன.

திக்கு

வீடுகட்டுவதற்கு தெற்குப் பக்கத்தில் உள்ளகாணியால் தோஷம் ஏற்படாதவாறு காணியைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

நித்தமும் பிணம் போகும்பாதை, பிணம் புதைக்கப்பட்ட இடங்கள் கூடாது.

முதலில் ஒரு காணியை வாங்கினால் அக்காணியை உழுது நவதானியங்கள்விதைக்க வேண்டும். விதைத்து பயிரானவுடன் அக்காணிக்குள் பசுக்களை மேயவிட வேண்டும். இதைக் கோப்பிரவேசம் என்பர்.

வீடுகட்டினபின்னர் பசுவும் கன்றும் கோப்பிரவேசம் செய்தபின்னர்தான் குடிபுகல்வேண்டும்.

காணிக்கும் அப்படித்தான் கோப்பிரவேசம் செய்து கருப்பம் வைத்தல் வேண்டும்.

பசு, பசுக்கன்று, காளை முதலியனவற்றின் காலடிகள் பட்ட, அவைகளினால் முகர்ந்து பார்க்கப்பட்டபூமியானது சுத்தம் செய்யப்பட்டதாகின்றது, கன்றுகளின் வாயிலிருந்து சிந்திய நுரையினாலும். பாற்பெருக்கினாலும் அந்தப்பூமி சகல தோஷங்களிலிருந்தும் தூய்மைப்படுகின்றது.

சந்தோஷமடைந்த பசுக்களின் சப்தங்களினால் அந்தப் பூமியிலிருக்கும் தோஷங்கள் அகற்றப்படுகின்றன. பசுவின் மூத்திரத்தினாலே நனைந்தும், சாணத்தினாலே முழுகப்பட்டும், அசைவினால் மணம்பெற்றும் விளங்குகின்ற பூமியானது, அவைகளின் குளம்படிகளினால் காப்புக் கட்டப்பட்டதாகின்றது.

வீடு கட்டுவதற்கு ஆகாத இடங்கள்

தெற்கும்,மேற்கும் தாழ்ந்த பூமி,சண்டாளர்,சன்னியாசிகள், பேய் பிடித்தவர்கள் வசித்த இடம், கடைத்

தெரு, அம்பலம், சந்தி, கிணறு, குளம், கோயில், புற்று, பெரு விருட்சம் இவைகள் இருந்த இடம், மயானம் பள்ள நிலம் படுகுழிநிலம், வெள்ளம் நிற்கும் இடம், யுத்தம் செய்த இடம் முதலிய பூமிகள் மனை கோலுதற்கு விலக்கப்பட்டன. கோயில், கோபுரம், துலா அரசு, வன்னி, எருக்கு, வில்வம் இவைகளின் நிழல் வீட்டிற் படலாகாது. மனை வகுக்குமிடத்துக் கிழக்கு, தென் கிழக்கு, தெற்கு, தென் - மேற்குத் திக்குகளில் வேறு மனைகள் இருத்தலாகாது. ஒரே திக்கு முகடாயிருப்பினும், இடையே தெரு விருப்பினும் தோஷமில்லை. வடக்குக் கிழக்குத் திசைகளில் வெள்ளம் பாய்ந்தோடும் என்பதற்காகவே வடக்குக் கிழக்குத் தாழ்ந்த பூமி உத்தமம் என்றும் தெற்கு மேற்கு தாழ்ந்த பூமி கூடாதென்றும் வழக்கத்தில் வந்தது. வெள்ளம் மட்டுமன்றி கிணற்றில் அள்ளி உபயோகித்த நீர்கூட வடகீழ்த் திசைகளில் ஏகவேண்டும். இதற்காகவே தென்கிழக்கு, தெற்கு, தென் மேற்கு திசையில் அமைக்கும் கிணறுகளை அதமமெனக்கைக்கொள்வார் ஆயினர். இதற்குச் சான்றாக மயநூலில்.

தெரு சித்த வாரல் நீர் தென்திசையே கிடில்
வரு சித்த செல்வம் வற்று மென்றார் மயன்
வரு சித்த வாரல் நீர் வடதிசை பாய்ந்திடில்
தெரு சித்த பால் நெய் சேரு மறுதினம்.

ஒரே மாதிரியான அமைப்பு நீளம், அகலம், உயரமுடையதான வீடு கிழக்கு தெற்கில் சமீபத்தில் இருந்தால் தோஷமில்லை. தற்பொழுது எத்தனையோ இடங்களில் இது போன்ற வீடுகள்கட்டிச் செல்வமாக வாழ்வதைக் காணலாம்.

மனையென்ற சொல் பெண், வீடு என்ற பொருள் தந்து நிற்கும். மனைகள் நான்கு வகைப்படும். அவை யாவன இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பமென

முறையே மேற்கு, வடக்கு, கிழக்கு, தெற்கு வாயில்கள் உடையவாம்.

வாயில் — இல் + வாய். வீட்டுத் தாயறை வாயிலை, குறிக்கும். சிலர் புழக்கத்திற்கு விட்ட வாயிலை பிழையாக வீட்டுவாயிலெனக் கருதுவார்கள்.

மனைகள் நான்கு வகைப்படும். அதேபோல் பெண்களும் அத்தினி, சித்தினி, பதுமினி, சங்கினி என நால் வகையினர்.

கிழக்குவாயில் வீடு — மேற்கு ஊடு
வடக்குவாயில் வீடு — தெற்கு ஊடு
தெற்குவாயில் வீடு — வடக்கு ஊடு
மேற்குவாயில் வீடு — கிழக்கு ஊடு

இது நாட்டு வழக்குச் சொல். சிற்பச் சொல்லால்·

கிழக்கு மனை	— மேற்பால் வீடு	— மேல்சார் வீடு
வடக்கு மனை	— தென்பால் வீடு	— தென்சார் வீடு
தெற்கு மனை	— வடபால் வீடு	— வடசார் வீடு
மேற்கு மனை	— கீழ்பால் வீடு	— கீழ்சார் வீடு

இதைக் கவனித்தால் ஒருகாணிக்குள் என்னவாயில் வீடு என இலகுவாகக் கண்டு கொள்ளலாம். காணியின் எதிர்த்திசையை நாடும் கட்டியிருக்கும் வாயில் வீடு· கிழக்குவாயில் வீடு காணியின் மேற்குப் பக்கத்து எல்லையை நாடும்.

இதைப்போல் மற்றவையையும் காண்க. தாயறையின் நீளப்பக்கத்திற்குத்தான் வாயில் வரும். இதில் பாகம் செய்து நிலை நிறுத்துவோம். ஒரு வீட்டு நிலையில் இருந்து அவ்வீட்டுத் தலைவனின் வாழ்க்கை நிலையைக் கவனிக்கலாம்.

வாயில் நிலை = வாழ்க்கைநிலை = வருவாய்

தாயறைக்கு ஒருவாயில்தான் வகுக்க வேண்டும்· தாயறையின் நீளப்பக்கம்தான் முறையான வீட்டு முகட்டின் நீட்சியாகும்.

தாயறையிலிருந்துதான் கட்டிடம் ஆரம்பமாகி வடக்கு அல்லது கிழக்கு நோக்கி வளரும்.

வளை, முகடு வளர்வது வடக்கேயேனும் கிழக்கேயேனும். இலங்கையில் சில சில பகுதிகளில் வாயில் வீடுகளைப் பற்றி அபிப்பிராய பேதங்கள் ஊன்றிவிட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தில் கிழக்கு வாயில் வீடும், தெற்குவாயில் வீடும்தான் கட்டுவார்கள்.

உசன், உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, வல்வெட்டி ஆகிய இடங்களில் மேற்கும், தெற்கும் ஆகிய இருவீடுகளைத்தவிர வேறு வீடுகள் கட்டமாட்டார்கள்.

இந்தியாவில் ஒரு நண்பர் பின்கண்டவாறு விளக்கினர். மேற்கு, வடக்கு, கிழக்கு, தெற்கு வாயில் வீடுகள் முறையே மூக்கு, கண், வாய், செவி போன்றவை எனலாம்.

மூக்கு — பிறந்தகாலம்தொட்டு இறக்கும்வரைதொழில் படுவது

கண் — விழிக்கும் பொழுது தொழில்பட்டு உறங்கும் போதே ஓய்வெடுப்பது

வாய் — பல்லக்கு ஏறுவதும் வாய், பல்லுடைபடுவதும் வாய்

செவி — கீதத்தைக் கேட்பதும் செவி, ஒற்றுக் கேட்பதும் செவி

எந்தவாயில் வீடாயினும் முறையாக அமைத்தல் நன்று. காணியின் அமைப்பிலும், அவ்வூர் வழக்கிலும் பிறந்த இராசிக்கும் ஏற்றவாறு வீடுகளைத் தீர்மானிக்க வேண்டும். எத்தனையோ காரண காரியங்களை அநுசரித்து வாயில் வகுக்கவேண்டும் என்பதற்காகவே ஒருவரின் பிறந்த இராசிக்கு இரண்டு வாயில்கள் பொருத்தமெனக் கொடுபட்டிருக்கின்றன. காணியின் நீளத்திற்கு ஒப்ப முகட்டின் நீளமாக இருப்பது வீடு

கட்டுவதற்கு வசதியாக இருக்கும். சிலர் பாதை, தெருவுக்குத்தான் வீட்டின் முகடு சமாந்தரமிருக்க வேண்டுமெனக் கருதுவர். கிணறிருந்தால் அதற்கேற்றவாறு வீடு எடுத்தல் வேண்டும்.

விட்டுக்கருப்பம்

மஞ்சள், இராசவாசல்மண், புண்ணியஸ்தலத்து மண், மலைமண், ஆற்றுமண், புற்றுமண், அரசடிமண், நாற்சந்திமண், ஆனையடிமண், எருதுக்கோட்டுமண், தர்ப்பையடிமண், குளமண், கொழுமண், சங்கு, பஞ்சலோகம், நவரத்தினம், தாமரை வளையம், ஓரிதழ்த் தாமரை, விஸ்ணுகிராந்தி முதலியன வீட்டுக் கருப்பம் வைப்பதற்கு தேவையான பொருட்கள்.

பன்னிரு இராசிகளின் நட்சத்திர நியதி

மேடம் — அச்சுவினி, பரணி, கார்த்திகை முதலாங்கால்

இடபம் — கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை

மிதுனம் — மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புநர்பூசத்து முன்முக்கால்

கர்க்கடகம் — புநர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.

சிங்கம் — மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.

கன்னி — உத்தரத்துப் முன்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.

துலாம் — சித்திரையிற் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்.

விருச்சிகம் — விசாகத்து நாலாங்கால், அனுஷம். கேட்டை.

தனு — மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்,

மகரம் — உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.

கும்பம் — அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்.

மீனம் — பூரட்டாதி நாலாங்கால், உத்தரட்டாதி, ரேவதி.

பிறந்தவிராசி		பொருத்தமான வாயில்கள்	
மேடம்	—	மேற்கு	வடக்கு
இடபம்	—	கிழக்கு	வடக்கு
மிதுனம்	—	கிழக்கு	வடக்கு
கடகம்	—	கிழக்கு	வடக்கு
சிங்கம்	—	கிழற்கு	தெற்கு
கன்னி	—	கிழக்கு	தெற்கு
துலாம்	—	கிழக்கு	தெற்கு
விருச்சிகம்	—	மேற்கு	தெற்கு
தனு	—	மேற்கு	தெற்கு
மகரம்	—	மேற்கு	தெற்கு
கும்பம்	—	மேற்கு	வடக்கு
மீனம்	—	மேற்கு	வடக்கு

வீட்டுராசிக்கு தலைவி, தலைவன் பிறந்த இராசி (7 வது — 12 வது) வரை வலமாக இருத்தல் வேண்டும். (1வது — 6வது) வரை இடமாக இருத்தல் கூடாது.

முன்னுவது வலமாவது நன்று''

வீட்டுராசி		ஜனன இராசி
கிழக்கு	—	இட, மிது, கட, சிங், கன், துலா
தெற்கு	—	சிங், கன், துலா, விரு, தனு, மக
மேற்கு	—	விரு, தனு, மகர, கும்ப, மீன, மேட
வடக்கு	—	கும், மீன, மேட, இட, மிது, கட
உத்தமம்	—	3, 10, 11 ஆக வருவது
மத்திமம்	—	2, 4, 5, 9 ,,
அதமம்	—	1, 6, 8, 12 ,,

வாயிற் பொருத்தம்

குடமீன் மேடத்துதித்தோர்க்கு
கூறுமேற்கு வடக்காகும்
விடையாழ் குளிருத்தரம் கிழக்காம்
விறலார் சிங்கம் பெண்டுலைக்குக்
கொடியார் கிழக்குத் தெற்காகுங்
கொடுந்தேள்வின்மானமன் மேற்காம்
வடிவார்வாயில் விடுந்திக்குவகுத்தார்
மிகுத்த மதிவல்லோர்

சரசோதி-மனைசெய-

குடம்	—	கும்பம்
விடை	—	இடபம்
யாழ்	—	மிதுனம்
குளிர்	—	கடகம்
உத்தரம்	—	வடக்கு
பெண்	—	கன்னி
துலை	—	துலாம்
தேள்	—	விருச்சிகம்
வில்	—	தனு
மான்	—	மகரம்
நமன்	—	தெற்கு

சந்திரலக்கினத்திற்கு பார்ப்பது போல் உதயலக்கினத்திற்கு வாயில் வகுத்தல் வேண்டும்.

மேடம்	—	வடக்கு, கிழக்கு
இடபம்	—	தெற்கு
மிதுனம்	—	தெற்கு
கடகம்	—	தெற்கு
சிங்கம்	—	மேற்கு
கன்னி	—	மேற்கு
துலாம்	—	மேற்கு
விருச்சிகம்	—	கிழக்கு, வடக்கு

தனு	—	வடக்கு
மகரம்	—	வடக்கு
கும்பம்	—	வடக்கு
மீனம்	—	கிழக்கு

வாஸ்து புருஷனின் வேறு பெயர்கள்

பூபாலன்,
இராசி மன்னன்
மனை வேந்தன்
கிருகநாதன்
சல்லியபுருடன் என்பனவாம்

வாஸ்து புருஷன் எழுந்திருப்பு

சித்திரை	—	10	—	5 நாழிகை
வைகாசி	—	21	—	8 நாழிகை
ஆடி	—	11	—	21 நாழிகை
ஆவணி	—	6	—	21 நாழிகை
ஐப்பசி	—	11	—	2 நாழிகை
கார்த்திகை	—	8	—	10 நாழிகை
தை	—	12	—	8 நாழிகை
மாசி	—	20	—	8 நாழிகை

இவை ஒவ்வொரு வருடத்திலும் அந்தந்த மாதத்தில் குறித்த தேதிகளில் வருவதால், இக்கதி பூமியின் சுற்றுகையில் ஏற்படும் கதியாகும். இதற்கும் வான சாஸ்திரத்திற்கும், பூமிசாஸ்திரத்திற்கும் தொடர்புண்டு.

மாதபலன்

சகல சுப முகூர்த்தத்திற்கும் வைகாசி, ஆவணி, கார்த்திகை, மாசி மாதங்கள் உத்தமமெனவும், சித்திரை, ஆடி, ஐப்பசி, தை மாதங்கள் மத்திமமெனவும், பங்குனி, ஆனி, புரட்டாதி, மார்கழி மாதங்கள் அதமமெனவும் கூறிப்போந்தனர் மூதறிவாளர். சூரியன் உபயராசிகளாகிய மீன, மிதுன, கன்னி, தனுராசி

களில் பிரவேசம் செய்யும் காலம் முறையே பங்குனி ஆனி, புரட்டாதி, மார்கழி மாதங்களாகும்.

உபயராசி-சரமும்ஸ்திரமும் சேர்ந்தது. எனவே இக் காலங்கள் சோதிடரீதியாக கூடாது.

பங்குனி	—	மார்ச்சு 15	—	ஏப்ரல் 15 வரை
ஆனி	—	யூன் 15	—	யூலாய் 15 வரை
புரட்டாதி	—	செப்டெம்பர் 15	—	அக்டோபர் 15 வரை
மார்கழி	—	டிசெம்பர் 15	—	ஜனவரி 15 வரை

பூமிசாஸ்திர முறைப்படி:- மார்ச்சு 21, யூன் 21, செப்டெம்பர் 21, டிசெம்பர் 21, சூரியனை பூமி சுற்றி வருகையால் பருவ காலங்கள் நிகழ்கின்றன. பருவ காலம் மாற சீத உஷ்ண நிலையும் மாறுதலடையும். மக்களுக்கு தேக நிலையும் மாறுதலடைந்து நோய்களுக்கு ஏதுவான காலம்.

சிற்ப முறைப்படி:- வாஸ்து புருஷனின் வயிறு பங்குனி, ஆனி, புரட்டாதி, மார்கழி மாதங்களில் முறையே மிதுன, கன்னி, தனு, மீன இராசிகளில் நிற்கும். மேலே கூறப்பட்ட இராசி வீடுகளின் வாஸ்து கோணத் திசைகளாம்.

கோணத்திசைகளின் வீடுகள் இல்லை. வடகிழக்கு-மீனராசி, வடகிழக்கு வீடு ஒன்றில்லை. கோணத்திசை வீடுகள் ஒன்றில்லை. வாஸ்து புருஷன் எழுந்திருக்காத மாதங்கள் ஆனி, புரட்டாதி, மார்கழி, பங்குனி ஆகும்.

கூனியில் குடி புகாதே
ஆனியில் அடி வைக்காதே

புராண இதிகாசப்படி

ஆனி	—	மாபலிச் சக்கரவர்த்தி ஊரை விட்டே ஓடினர்.

புரட்டாதி	—	இரணியன் மாண்டான்
மார்கழி	—	பாரதப்போர் நிகழ்ந்தது
பங்குனி	—	சிவனும் ஆலகால விஷமுண்டார்.
	—	மன்மதனும் எரிந்தான்.

வானசாஸ்திரப்படி

பங்குனி 7-ந் திகதியிலும், புரட்டாதி 7-ந் திகதியிலும் கிழக்கித்திசை கண்டு பிடிப்பதற்கு சங்கு நடுவார்கள், அன்றுதான் இராமானமும் பகல்மானமும் சமனாகும்.

ஆனி 7-ந் தேதியிலிருந்து பகல் மானம் 1 நாழி - 25 விநாடி கூடும். மார்கழி 7-ந் தேதியிலிருந்து பகல் மானம் 1 நாழி 25 விநாடி குறையும்.

எனவே, எத்தனையோ காரணங்களால் பங்குனி, ஆனி, புரட்டாதி, மார்கழி மாதங்கள் சுப காரியங்களுக்கு விலக்கப்பட்டன.

மேல்நோக்கு நாள்

ரோகிணி	உத்தரம்	அவிட்டம்
திருவாதிரை	உத்தராடம்	சதயம்
பூசம்	திருவோணம்	உத்தரட்டாதி

இதை ஊர்த்தமுக நட்சத்திரமெனவும் அழைப்பர். இதில் உத்தியோகம், பட்டாபிஷேகம், தூண் நாட்ட' கோபுரம் எழுப்ப நன்றாம். உயர்ச்சியான கருமங்களுக்கு நன்றாம்.

கீழ்நோக்கு நாள்

பரணி	மகம்	மூலம்
கார்த்திகை	பூரம்	பூராடம்
ஆயிலியம்	விசாகம்	பூரட்டாதி

இதை அதோமுக நட்சத்திரமெனவும் கூறுவர். இந்நாட்களில் கிணறு, ஏரி, குளம், வாவி, வாய்க்கால் வெட்டவும், கிழங்கு வகைகள், வெண்காயம் முதலிய கீழ்ப்பயிரிடவும் சாலச்சிறந்தது.

சமநோக்கு நாள்

அசுவினி	அத்தம்	அனுஷம்
மிருகசீரிடம்	சித்திரை	கேட்டை
புனர்பூசம்	ரேவதி	சுவாதி

சமநோக்குநாளை திருமுக நட்சத்திரமெனவும் கூறுவர். இந் நாட்களில் தொடரும் கருமங்கள் யாவும் செய்யலாம். ஆடு, மாடு வாங்க, வெற்றிலை, பூகினி முதலிய கொடி வகைகள் வைக்க நன்றும்.

கரிநாள்

மாதம்	—	தேதி
சித்திரை	—	6, 15
வைகாசி	—	7, 16, 17
ஆனி	—	1, 6
ஆடி	—	2, 10, 20
ஆவணி	—	2, 9, 28
புரட்டாதி	—	16, 29
கார்த்திகை	—	1, 10, 17, கார்த்திகை முதந் சோமவாரம்.
ஐப்பசி	—	6, 20.
மார்கழி	—	6, 9, 11
தை	—	1, 2, 3, 11, 17
மாசி	—	15, 16, 17
பங்குனி	—	6, 15, 19

மூ. க.:. எல்லா மாதங்களிலும் சூரிய கதியே குறித்திருக்கின்றனர் மாமறையோர். ஆனால் கார்த்திகை மாதம் முதற்சோமவாரத்தையும் கரிநாளாகக் கொண்

டனர். இது எப்பொழுதும் அம்மாதத்தின் ஒரே சூரிய கதிக்கு வராது. இதன் விளக்கம் புலப்படவில்லை.

காலற்றன	—	கார்த்திகை, உத்தராடம், உத்தரம்
உடலற்றன	—	மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம்
தலையற்றன	—	புனர்பூசம், விசாகம், பூரட்டாதி

இந்த ஒன்பது நாட்களிலும் வீட்டுக் கருமங்கள் யாவும், மற்றும் சுபகாரியங்கள் செய்யின் முழுதும் முடிவு பெறாது கஷ்டப்படுவார்கள். இது பொது விதி ஆகும்.

சிறப்பு விதி யாதெனின், மிருக சீரிடம், சித்திரை, அவிட்டம் உடலற்ற நாளாயினும் முகட்டு நாளாக வருவதால் வீட்டுக் கருமங்கள் சகலத்துக்கும் சிறந்தன. பூமி சூரியனைச் சுற்றி வருவதோடு தன்னையும் சுற்றி வருகின்றது. இது மேற்கு கிழக்காகச் சுழல்கின்றது. பூமியை மேடாதி மீனாந்தமாகப் பிரித்தால், சுழலும் பொழுது மீனாதி மேடாந்தமாகத் தோற்றும். மீனராசியை எடுத்துக்கொண்டால் ரேவதி, உத்தரட்டாதி, பூரட்டாதி 4-ம் பாதம் என வரும்.

பூரட்டாதி 4-ம் பாதம் மீனாதியாக நோக்குகையில் தலைப்பாகமாகத் தோற்றும். எனவே பூரட்டாதியும் அதன் திரிகோண நட்சத்திரங்களும் தலையற்ற நாள். இதே போன்று மற்றவைகளையும் காண்க.

ஞாயிறு	—	பரணி
திங்கள்	—	சித்திரை
செவ்வாய்	—	உத்தராடம்
புதன்	—	அவிட்டம்
வியாழன்	—	கேட்டை
வெள்ளி	—	பூராடம்
சனி	—	ரேவதி

இது கிழமை பிறந்தநாள். சகல சுப காரியங்களுக்கும் விலக்கப்பட்டது. இதை இலகுவாகக் காண்பதற்கு "பி" என்ற எழுத்தால் யோக அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இராகு காலம்

இதை இலகுவாகக் கணிப்பதற்கு தமிழில் ஒரு வாசகம் உண்டு. அஃதாவது "திருவிழாச் சந்தடியில் வெளியில் புறப்பட்டு விளையாடச் செல்வது ஞாயமல்ல" சொற்களின் முதல் எழுத்து வாரத்தைக் குறிக்கும். எனது நண்பர் சங்கீத வித்துவான் திரு. எம். என். கணேசபிள்ளை அவர்கள் தந்த வாக்கியமாவது :-

தி ச வெ பு வி செ ஞா -

இதுவும் எழுத்துக்கள் வாரத்தைக் குறிக்கும். இதையே ஆங்கிலத் தொடர்களால் விளக்குவாம்.

Mother Saw Father Wearing Turban Too Slowly.

சொல்லின் முதல் எழுத்துக்கள் ஆங்கில வாரத்தில் குறிக்கும்.

காரிய இடச்சுத்தி (மனைக்கு மாத்திரம்)

1-ம் இடம்	—	காணிபார்க்க
2-ம் இடம்	—	நிலையம் போட
3-ம் இடம்	—	மரம் வெட்ட
4-ம் இடம்	—	தச்சுவேலை ஆரம்பிக்க
5-ம் இடம்	—	வாசற்கால் நிறுத்த
6-ம் இடம்	—	உத்திரம், சட்டவிட்டம்
7-ம் இடம்	—	கூடம் அமைக்க
8-ம் இடம்	—	குறித்தலகு கை சாத்திவைக்க
9-ம் இடம்	—	குறுக்குப் பட்டை
10-ம் இடம்	—	ஓடுபோட, வேய
11-ம் இடம்	—	தெருக்கதவு நிலை நிறுத்த
12-ம் இடம்	—	குடிபுக

விலக்கப்பட்ட இராசிகள்

மேடம்	—	விவாகம் செய்ய
இடபம்	—	நிதிவைக்க
மிதுனம்	—	யாத்திரைக்கு
கர்க்கடகம்	—	மரம் வைக்க
சிங்கம்	—	குருவைக்காண
கன்னி	—	புணர்ச்சிக்கு
துலாம்	—	வீடு கட்ட
விருச்சிகம்	—	உழவுக்கு
தனு	—	கிணறு வெட்ட
மகரம்	—	கப்பல் யாத்திரைக்கு
கும்பம்	—	மயிர் கழிக்க
மீனம்	—	வியாபாரம் செய்ய

இட சுத்தம்

1-ம் இடம்	—	நிஷேகம்
2-ம் இடம்	—	விதை விதைக்க
3-ம் இடம்	—	தானியத்துக்கு
4-ம் இடம்	—	வித்தியாரம்பத்துக்கு
5-ம் இடம்	—	யாத்திரைக்கு
6-ம் இடம்	—	கோடியுடுக்க
7-ம் இடம்	—	விவாகத்துக்கு
8-ம் இடம்	—	உபநயனத்துக்கு
9-ம் இடம்	—	மயிர்கழிக்க
10-ம் இடம்	—	அன்னப்பிராசனத்துக்கு
11-ம் இடம்	—	முடிசூட்ட
12-ம் இடம்	—	குடிபுக

இருதுமது

இலக்கினம்	—	நிஷேகம்
2-ம் இடம்	—	ஆபரணம் பூணுதல்
4-ம் இடம்	—	வித்தியாப்பியாசம், கிணறு, துரவு வெட்டல்.

5-ம் இடம் — யாத்திரை செய்தல்
6-ம் இடம் — அரைஞாண் கட்டல், வஸ்திரம் தரித்தல்
7-ம் இடம் — விவாகம், ஆறு, வாய்க்கால் வெட்டல்
8-ம் இடம் — நாமகரணம், ஆயுதம் பயிற்றல், விதை விதைத்தல், - சூதக மனை புகுதல், வாகனமேற்றல், உழவு செய்தல், பும்சவனம், உபநயனம், தெய்வ பிரதிஸ்டை, தீட்சை பெறல், சீமந்தம், அபிஷேகம், காதுகுத்தல், மருந்துண்ணல், ஆடு மாடு கொள்ளல்.
9-ம் இடம் — சவுனம்
10-ம் இடம் — அன்னப்பிராசனம், சொற்பயிற்றல், தடாகம் வெட்டல்
11-ம் இடம் — பாகை போடல், முடிசூட்டல்
12-ம் இடம் — குடிபுகல் நட்சத்திர வகைகள்

ஸ்திரம் — ரோகிணி, உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி.
சர — புனர்பூசம், சுவாதி, திருவோணம், அவிட்டம், சதயம்.
இலகு — அசுவினி, பூசம், அத்தம்
தாருணம் — ஆதிரை, ஆயிலியம், கேட்டை, மூலம்
உக்கிரகம் — பரணி, மகம், பூரம்.
சாதாரணம் — விசாகம், கார்த்திகை, பூராடம்,
மிருது — மிருகசீரிடம், சித்திரை, அனுஷம் ரேவதி.


அக்னி நட்சத்திரம்

பரணி 4-ம் பாதம் தொடங்கி கார்த்திகை நட்சத்திரத்திலும், ரோகிணி நட்சத்திரம் 1-ம் பாதத்திலும்

சூரியன் பிரவேசஞ் செய்யுமட்டும் அக்கினி நாளாகும். இதில் மண்ணால், இரும்பால், கல்லால், மரத்தால் வீடு முதலியன செய்தல் கூடாது. இதைக் காண்டாவனம் பாவகநாள் எனவும் அழைப்பர்.

மனைகோலும் மாதம்

மாதம்		வாயில்
சித்திரை	—	வடக்கு
வைகாசி	—	வடக்கு
ஆடி	—	கிழக்கு
ஆவணி	—	கிழக்கு
ஐப்பசி	—	தெற்கு
கார்த்திகை	—	தெற்கு
தை	—	மேற்கு
மாசி	—	மேற்கு



இதேபோல் ஏனைய மாதங்களுக்கும் வாயில்களைக் கண்டுகொள்க.

ஆனால் நாங்கள் இப்பொழுது எதிர்ச்சார் வீடுகளையும் அம்மாதத்திற்கு மனைகோல எடுக்கின்றோம். இதன் விளக்கம் ஆராய்தற்குரியது. முகட்டின் நேர்தான் ஒன்றாக வரும். சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் வடக்கு தெற்கு வாயில்களும், ஆடி, ஆவணி, தை, மாசி, மாதங்களில் கிழக்கு மேற்கு, வாயில்களும் கட்டலாம்.

மனைமுதலிய செய்வதற்குரிய நட்சத்திரம்

திருவாதிரை, ஆயிலியம், விசாகம், பூரம், பூரட்டாதி, மூலம், கேட்டை, பரணி, அவிட்டம்

திதி

இருத்தை, உவா அகற்றிய திதிகளில் மனைகோலலாம்.

இராசி

ஸ்திரராசியிலும், உபயராசியிலும் மனைகோலலாம்.

வீடுகட்ட ஒதுக்கின காலம்

வியாழனும், வெள்ளியும் அஸ்தமனமாகவும் அல்லது மூடமாகவும், மனைவி கர்ப்பவதியாக இருக்கவும் அபரக்கிரியைசெய்த ஆண்டிற்குள்ளாகவும் வீடுகட்டுவதற்கு ஒதுக்கப்பட்டது.

விட்டை இராசிமானம் செய்தல்

வடக்கு மேற்குவாயில்களுக்கு இராசிமானம் செய்தல் சுலபமானது. வடக்கு வாயில் வீட்டை இராசிமானம் செய்தால் சிங்கராசியில் கருப்பம் வரும். இடம் போதாவிட்டால் சிங்கத்தின் முதலாவது இராசியாகிய கன்னியில் பாதிவரை எடுக்கலாம். கன்னி = உபயம் — சரமும்திரமும் சேர்ந்தன. இதே போன்று

மேற்குவாயிலான இடபராசி வீட்டுக்கும் இடபத்திற்கு முதலாவது இராசி மிதுனம் ஆகும். இதுவும் உபயராசியாகும். வடக்கு வாயில் மேற்கு வாயில் இராசிமானம் செய்யவோ அறைகள், கூடம், அமைக்கவோ சுலபமானது. குறைந்த பரப்புள்ள காணியும் போதுமானது.

இந்த இரு வீடுகளுக்கு அறை, கூடம் வாயில் அமைக்க வலப்பாகத்தில் அமையும். மற்ற இரு வீடுகளுக்கும் இராசிமானம் செய்வதற்குக் கூடியபரப்புள்ள காணிவேண்டும். இதனை இராசிமானம் செய்தால் அதற்கு முதல்வரும் இராசி சர இராசிகளாம். இதில் கருப்பம் வைத்தல் கூடாது.

(உ+ம்) கிழக்குவாயில் வீட்டுக்கு இராசிமானம் செய்தால் விருச்சிக இராசி பெறப்படும். இதற்கு முதலாவதாகிய துலாம், சர இராசியாகும். இதில் கொஞ்சமேனும் எடுக்கக்கூடாது இதேபோல் கும்பவீடாகிய தெற்கு வாயிலைக் கண்டுகொள்க. சரம் — ஏகுதல்.

கிழக்கு தெற்கு வாயில் வீட்டில் வலம் இடம்

சில இடங்களில் கிழக்குவாயில் வீட்டுக்கு வடக்கு தாயறையும், தெற்கு கூடமும் அமைக்கின்றார்கள். அவ்வூர் மக்கள் கூறும் உண்மைகளாவன:-

(1) வலப்பக்கத்தில் கூடம்; வாயில் வருமெனவும்

(2) கூடத்திற்கு இடப்பாகத்தில் தாயறை வருமெனவும், அப்பொழுதுதான் சத்தி அறை வாயில்களுக்கு கூடத்திற்கு தென் பாகத்தில் வருமெனவும்

இந்து சமயத்தவர் தாயறையைச் சத்தியென்றும் கூடத்தை சிவன் என்றும் வழங்குவது வழக்கம்.

ஏய்ந்தகீழ்பால் தென்பாலிலங்கு மனைகள்வெளிவலமாம்
வாய்ந்தவடபால் மேல்பாலில் மருவுமனை நூனை வலமாம்
ஆய்ந்தே அறிந்து வலமிடமும் அகிலத்துள்ளோர்
[யாவருக்கும்
ஒய்ந்தே வாசல் நிலைகூடம் ஒழுங்காம் விருந்தைசெய
[வோதே

சிற்ப — சிந்தாமணி

ஒதேயிடபஞ் சிங்கமனை யொழுங்காமுன் நின்றே
[வெளியார்
மாதேகும்பந் தேன்மனைகள் வழுவாவெளி நின்றுள்ளே
[பார்.
தோதேயாகும் வலமிடமும் தொகுத்தார் மனைகள்
[நாலுக்கும்
வாதே புரியாது அறிந்து வழிவகுத்தார் பூமிநிலை
[யறிந்தே

சாற்றுமில் இடபம் சிங்கம் சரிவலம் வலக்கைபாகம்
மாற்றுமில் கும்பம்தேள் இடக்கையே வலப்பாகந்தான்
ஆற்றுவரளவு வாயில் அறைகூடம் விருந்தைகொள்வர்
போற்றுவீர் வலமிடங்கள் பொருத்தமாய் மனைகள்
[கண்டே

பூமியின் கீழ்ப்பாகம் புத்தியலறிந்து கொண்டு
ஆமிதிலாறு ராசியரும் பகலிரவாமாறு
தாமிது பாகை முந்நூற்றறுபது தரணிவட்டம்
போமிதுபகல் நூற்றெண்பான் பொருந்துரா நூற்றெண்
[பானே

தாமிதில் வலமிடங்கள் தகுதியாய் யுரைக்க வேண்டில்
பூமியின்மனை வலந்தான் வடக்குடன் கிழக்குமாகும்
ஆமிது தெற்கும் மேற்கும் மறைவதே யிடமதாக
நாமிது பூமிசுற்று நண்ணுவ தறிந்தே நாடே.

சாற்றுவா மேடமாதிசரி கன்னியந்தம் மேலாம்
போற்றுவர் துலையதாதி புகழ் மீனமந்தம் கீழாம்
சாற்று சவ்விய மாறும்சரி யபசவ்விய மாறும்
தேற்றுவரிதனை யோர்ந்து தெரிவல மிடமுந்தானே

அ. செ. கை. பி

சிலருக்கு கூடத்திற்கு இடப்பாகத்தில் தாயறை வரவேண்டும் என்பது துணிபு. இருதயமும் இடப் பாகத்தில் தான் இருக்கின்றது

தெற்கு வாயில் வீட்டுக்கு தாயறை கிழக்குப் பாகம் வரும். மேற்குப் பாகம் தான் கூடம் வரும். இதுவும் மேற் கூறிய விதிக்கும் பொருந்தியது.

இதைப் பெரும்பான்மையாகக் கொள்ளும் இடங் கள் வல்வெட்டி, வல்வெட்டித்துறை, தொண்டை மாறுறு, உடுப்பிட்டி போன்ற விடங்களாகும்.

எமது குரு இதைப் பிழையென வாதாடுவர். வளை வளருவது வடக்கேயேனும், கிழக்கேயேனும். அதாவது கட்டிடம் வளர்வது.

கிழக்கு, தெற்கு வாயில் வீடுகளுக்கு கூடம் முறையே தெற்கு, மேற்காக வந்தால், கட்டிடம் வளர் வது தெற்கும் மேற்கும் ஆகும். எனவேஇது பிழை யாகும்.

வளர்வதெல்லாம் வடக்கும் கிழக்கும் என்பது விதி.

வளை, வாழை இலை, உத்தரம், சட்டம், விட்டம் ஆகிய எல்லாம் வடக்கேயேனும் கிழக்கேயேனும் நோக்கவேண்டும்.

எனவே, கிழக்கு வாயில் வீட்டுக்கும், தெற்கு வாயில் வீட்டுக்கும் தாயறை முறையே தெற்கேயும், மேற்கேயும் அமைத்தல் வேண்டும். அப்பொழுது தான் வடக்கேயேனும், கிழக்கேயேனும் கட்டிடம் வளரும்.

கருப்பம் வைத்தல்

தாயறை வீட்டின் தென்மேற்கு மூலையிற்றான் கருப்பம் வைத்தல் வேண்டும். சிலர் வட-கீழ்த்திசை யில் வைத்தல் வேண்டும் என்பர்.

இன்னும் சிலர், மேற்கு தெற்கு வாயில்களுக்கு முறையே அக்கினி மூலையிலும் வாயு மூலையிலும் வைத்தல் வேண்டும் என்பர்.

இதேபோன்று வீட்டிற்கு படம் வைத்தலிலும் வாதாட்டம் நடைபெறுகின்றது.

வடக்கு, கிழக்கு வாயில் வீடுகளுக்கு தென்மேற்கு மூலையில் கிழக்குப்பார்த்து படம் வைத்தல் வேண்டும். இதில் பிழை நேரிடாது. மேற்கு, தெற்கு வாயில் வீடு களுக்கு முறையே தென் கிழக்கு, வட மேற்குத் திக்கு களில் படம் வைத்தல் வேண்டுமென்பது சிலர் மதம்.

வாயிலைத் திறந்தவுடன் படத்தைப் பார்க்கத் தகுந்ததாகவும், படம், வாயிலைப் பார்க்கும்படியும் வைத்தல் வேண்டும் என்பதே இவர்களின் கொள்கை.

இதை நான் வாசகர்கள் மத்தியில் பிழை சரிக்கு விடுகின்றேன். நான் எனது அறிவின்படி இதுவரை காலமும் செய்து வருவதாவது;

தாயறையின், தென்-மேற்கு மூலையில் கருப்பம் வைப்பித்தல், தென் மேற்கு மூலையில் கிழக்கு நோக்கி படம் வைப்பித்தல் ஆகியன. இவை எனது குருவின் கூற்றாகும்.பூசை முகம் கிழக்காகும்.கும்பிடும் பொழுது மேற்குப்பார்த்து வணங்குதல் வேண்டும்

தென்—மேற்கு— தாயறையில் விளக்கேற்றல்
வட —கிழக்கு—அடுக்களையில் அடுப்பு எரித்தல்

இவை இரண்டும் பருவக் காற்றின் திசைகளாகும்.

கட்டிடத்திற்கு நான்கு பக்கமும் வாயில் இருப்பின் விச்வதோ முகம் என்று பெயர்.

கட்டிடத்திலிருந்து நான்கு பக்கத் திசைகளாலும் வாயில் வைத்து காணிக்குள் இறங்குவது முற்காலத் தில். இதனால் நாற்சார்பு வீடு கட்டி நாலு வாயில் வைப்பார்கள். இதன்பலன் — பிரதாபம், செல்வம் அதிகாரம், மரபுப்பேறு. கிழக்குப்பக்கம் இல்லாமல் மற்ற மூன்று பக்கம் இருப்பின் வியாக் கிரபாதம் எனப்படும். இதன் பலன்-கன்று, காலி நஷ்டமும், கள்வர் பயமும், ஆயுதப்பீடையும் உண்டாம்.

தெற்குமுகமில்லாமல் மற்றமூன்று பக்கமும் வாயில் இருந்தால் பாக்கிய பிரதம்.

இதன் பலன் — சுபம், செல்வம்

மேற்கு முகமில்லாமல் மற்றமூன்று பக்கங்களிலும் வாயில் இருப்பது ஸ்ரீ நிலையம் எனப்படும்.

இதன் பலன் — அஷ்டலஷ்மி வாழ்வாள்

வடக்குமுகம் இல்லாமல் மற்ற மூன்றுபக்கம் வாயில் இருப்பது கமலாகரம் எனப்படும்.

இதன் பலன் — உத்தமம்

(1) ஆற்றுக் குத்தல் (2) குளக் குத்தல்
(3) கிணற்றுக் குத்தல் (4) ஸ்தம்பக் குத்தல்
(5) சந்துக் குத்தல் (6) மரக் குத்தல்
(7) தேரோடும்வீதிக் குத்தல்
(8) சாக்கடை அல்லது வாய்க்கால் குத்தல்
(9) தெருமூலைக் குத்தல் (10) தேவதையின் குத்தல்
(11) சுவர்க் குத்தல் (12) ஜலதாரைக் குத்தல்
(13) முகட்டுக் குத்தல் (14) நிலைக் குத்தல்

இவைகள் வீட்டின் உயரத்திற்கு 2 மடங்கு தூரத் திற்கு அப்பால் இருந்தால் தோஷமில்லை.

கோவிலுக்கு முன்னல் மாடிவீடு கட்டக்கூடாது. அது வீட்டின் உயரத்திற்கு 2 மடங்கு தூரத்திற்கு அப்பால் இருந்தால் தோஷமில்லை.

ஆற்றுக்குத்தல், குளக்குத்தல், மரக்குத்தல், இவைக்கு புத்திரர் பீடையும் இல்லாள் அயலவரிடம் குறை கேட்டலுமாம்.

முகட்டுக்குத்தல் — இது கடன்மலியும், தொழில் குறையும்.

கிணற்றுக் குத்தல்

இது தலைவனுக்குக் கால் கரத்தில் உபாதையும், காக்காய் வலியும், கட்டுப்புண்களும் ஏற்படும்.

சந்து—தெரு—தெருமூலைக்குத்தல்

இது வீட்டை விட்டு ஏகச்செய்யும். கடன்மலியும்.

ஸ்தம்பக்குத்தல், சுவர்க்குத்தல்

இது புத்திரர்க்குக் கூடாது, சில இடங்களில் அவயவச் குறைவான புத்திரரும் இருக்கின்றனர்.

தேரோடும் வீதிக் குத்தல்

இது அர்த்த நாசத்தைச் செய்யும்

தேவதையின் குத்தல்

இது தலைவனை அழித்துவிடும்.

சாக்கடை அல்லது வாய்க்கால் குத்தல்

இது துக்கமும், வீண் செலவுமுண்டாம்

நிலை

நிலை, குறிப்பிட்ட நீள அகலத்திற்கு அதிகமாக இருந்தால் அரசர்களாலும், திருடர்களாலும் பயமேற்படும்.

நிலைதணிந்த மட்டத்தில் இருந்தால் துக்கம் உண்டாகும். நிலைக்கு கதவு இல்லாமலும், பூட்டு இல்லாமலும் இருந்தால் பசியின் பயத்தைக் காட்டும், தலைவன் தலைவிகளுக்கிடையில் பிணக்கும் உண்டாகும்.

நிலைசாய்ந்தும் வளைந்துமிருந்தாலும் குலத்தைக் கெடுக்கும், நிலைசரி, கதவுசரி பல ஆணிகளால் தைத்து இருந்தால் தலைவனுக்கும் உபத்திரவம் ஏற்படும்.

நிலை முன்பக்கம் சாய்ந்தால் முதல்வனுக்குக் கூடாது, பின்பக்கம் சாய்ந்தால் சோரர் பயம்.

வாயில் வகுக்கும் முறை

ஓதிய வீடறை யொன்பது செய்தே
நீதி யோடைந்தறை நீள்வலம் விட்டுக்
கோதறு மூவறை கூறிடம் விட்டான்
மேதகுவாயில் விளம்பிடை செய்யே.

— சரசோதிமாலை

வீட்டறை நீள மென்பான் பாகமாய் வலமதாகி
நீட்டிடுபானு சோமன் சேய்புதன் குருபளிங்கு
மாட்டிடு சனியிராகு மன்னுகே தொன்பாகும்
பூட்டிடு வெள்ளிபாகம் புகல்வாயில் வகுக்க நன்றே.

—அ—செ—கெ—பிரதி

வீட்டுவாயில் எந்தப் பக்கமோ அந்தப் பக்கம் நோக்கி நின்று வலப்பக்கம் 5 பங்கும் இடப்பக்கம் 3 பங்குமாக பிரித்தல் வேண்டும். வலப்பக்கத்தில் இருந்து தான் சூரியன் முதல் கேதுவரை ஒன்பது பாகமாகக் கணிக்கப் பெறும்.

கிழக்குவாயில் வீட்டுக்கு தென்கிழக்கு முதலாக வடகிழக்கு வரையும்.

வடக்குவாயில் வீட்டுக்கு வடகிழக்கு முதலாக வடமேற்கு மூலைவரையும்.

தெற்குவாயில் வீட்டுக்கு தென்மேற்கு முதலாக தென்கிழக்கு மூலை வரையும்.

மேற்கு வாயில் வீட்டுக்கு வட மேற்கு முதலாக தென் மேற்கு மூலை வரையும்.

சூரியன் முதலாகக் கேதுவரை கணிக்கப்பட வேண்டும். வெள்ளிபாகத்தில் நிலைவைக்க வேண்டும்.

சில முக்கிய கவனிப்புகள்

1. தூண்கள் நேராக நடுதல்.
2. பத்தியோடு பத்திசேர அமைத்தல்.
3. வீட்டுக்கு முன்னால் குத்துச்சுவர் அல்லது கட்டைச் சுவர் வராது அமைத்தல்.
4. தாயறைக்கு எதிராக அகலப்பாட்டிற்காவது அல்லது நீளப்பாட்டிற்காவது கிடங்கு, கிணறு வராது அமைத்தல்.

   சிலவிடங்களில் மலக்குழி அமைக்கின்றார்கள். இதுவும் கிணற்றுக்குச் சமமானது.
5. பிரதான அறைக்கு முன்னால்தான் வருட, அயன, சங்கிராந்தி பொங்கல் பொங்கவேண்டும்.
6. சில விடங்களில் மூன்றுமுகடு வரும்படி மூன்று சாரிகள் அமைக்கின்றார்கள். இது பிழையாகும். சுளகைப் போல் புடைத்துத்தள்ளும். ஒருமுகடு கூட்டி நான்கு சார்புகளாக்க வேண்டும். இல்லையேல் ஒன்றைக் குறைத்து இரு சாரிகளாக்க வேண்டும்.
7. நிலைக்குநிலை நேராக வைக்கலாம். அப்படிவைக்கும் பொழுது நிலைக்குத்து வராது. தாயறை நிலைக்கு நேரே நிலை அல்லது பலகணி வைத்தல் வேண்டும். அப்பொழுது தான் அறையின் விளக்கொளி முன்பாக ஒளி வீசும். விளக்கொளி முன்பக்கம் நீண்டால் திருமகள் தினமும் திருநடனம் புரிவாள். பின்பக்கம் நீண்டால் மூத்தவள் உலாவுவாள்.

8. பின் நீளவிடாது முன்பக்கம் நீளத்தக்கனதாகச் சாலையில் நிலைக்கு நேராகப் பலகணி அல்லது நிலைவைத்தல் வேண்டும்.

   சிலவூர்களில் இன்றும் தாயறைக்குப் பின்பாகத்தில் பலகணி வைப்பதில்லை. ஒளி பின்பக்கம் வீசும் என்பதற்காகவும், கள்ளர் பயத்திற்காகவும் வைப்தில்லை.
9. தாயறைக்கு முன்னால் அறை வகுக்கக்கூடாது. தாயறையின் நீளத்திற்குஒப்ப அளவுள்ளதாக அமைக்கலாம். சிலர் சாலை சிறுத்துப்போகும் என்ற காரணத்திற்காக அறையைச் சிறுப்பிப்பார்கள். அப்பொழுது தாயறைக்கு முன்னால் குத்துச் சுவர் தோன்றும். இது கூடாவாம்.

   சம நீளமுள்ள அறை அமைத்தால் குத்துச் சுவர் வராது. இப்படி அமைக்கும் பொழுதும் தாயறைச் சுவருக்கு நேரே நிலை, அல்லது பலகணியும் வைத்தும், சாலைச் சுவரிலும் பலகணி அமைத்து விடல் வேண்டும்.

   முற்றம்—முன்றில்—இல் + முன். முற்றத்திற்கு வீட்டின் விளக்கொளி தெரியவேண்டும். விளக்கொளி தெரியாது அமைத்தால் புறப்பட்டுப் போகும் விடயமெல்லாம் தடைப்படும்.
10. தாயறை வாயிலுக்கு முன்னால் சாஸ்திர ரீதியாக அறை சரிவர அமைக்க முடியாவிட்டால், இரண்டாவது அறைக்கு முன்னால் அறை அமைக்கலாம். ஊர்த்துவமுக நட்சத்திரத்தில் நிலை வைத்தால் மன்னர் மதிப்பு, கீர்த்தி முதலியவைகள் உண்டாகும்.

ஜன்ம நட்சத்திரத்திலும் திரிகோண நட்சத்திரத்திலும் நிலை வைத்தால் இடித்து இடித்து வைக்க நேரிடும்.

தீரியமுக நட்சத்திரத்தில் நிலைவைத்தால் லக்ஷ்மீகரம் உண்டாகும்.

அதோமுக நட்சத்திரத்தில் மிருத்து பயமுண்டாம்.

வாயில் நிலைக்கு மேல் இரண்டு கஸ்தூரிக் கட்டைகள் முக்கியமாக வைத்தல் வேண்டும்.

வீட்டிற்குக் கருங்கல்லால் நிலை வைத்தல் கூடாது.

நிலை பழுதடைந்தால் எடுத்துவிட்டு புதுநிலை வைக்கலாம். வைத்தவுடன் வாஸ்து பூசை செய்தல் வேண்டும்.

நிலை பழுதடைந்தாலன்றி நிலைபெயர்த்து வைத்தல் கூடாது. ஸ்திரலக்கினங்கள் உதயமாக நிலை வைக்கலாம்.

கதவு, புதன், வெள்ளி வாரங்களில், அசுவினி பூசம், அத்தம், ரோகிணி, உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி நட்சத்திரங்களில் பூட்ட மகாலட்சுமி தங்குவாள். கதவு, நிலைக்கு வலப்பக்கத்தில் பூட்ட வேண்டும்.

கதவு

வீட்டின் கதவு மூடும்பொழுது மூஞ்சூறுபோல் சத்திக்குமாயின் செல்வமும், பெருமையும், பிரிந்து போய்விடும்.

மூடும்பொழுது கிரீச்சென்று சத்திக்குமாயின் நவரத்தினம், ஐம்பொன் தொலைந்து போகும்.

கதவு திறந்து மூடும் பொழுது வண்டு போல் ரீங்காரம் செய்யுமாயின் அங்கே இலக்குமி தங்குவாள்.

மூடிய கதவு தானும் ஊழி போல் முழங்குமாகில் அவ்வீட்டுத் தலைவன் வேசிக் கள்வனாவன்.

சங்கைப் போலவும், தாளத்தைப் போலவும், சக்திக்குமாகில் அங்கே திருமகள் தினமும் திருநடனம் புரிவாள்.

கரும்பாலை செக்கும் போலே ஓசை கேட்டால் இடத்தை விட்டேகப்பண்ணும். மக்களால் துன்பமுண்டாம். ஒந்திபோல் கத்துமாகில் சத்துரு பயமும், மக்களால் பீடையும் உண்டாம்.

கதவைத் திறக்கும் பொழுது வலியான் போலே கதறுமாகில் மனைவி, மக்களுக்குப் பீடையுண்டாம்.

கௌதாரிபோல் கதவு சத்தம் போடுமாயின் வீட்டில் வினையுண்டென்றறிக.

கொக்கது போல் கதவு சத்திக்குமாயின் செல்வம் குறையும், பிசாசு குடிகொள்ளும்.

ஓரிபோல் ஊளையிடுமாயின் காரியம் சேதமாகும் வீரியம் குறையும்.

கழுதையைப்போல் கத்துமாகில் பகையினால் ஆண்டியாகப் பண்ணும்.

பேரிகை மேளம் போல் பேசிடில் காரியக்கேடும், நாரியருக்கு நட்டமும் காட்டி, ஊரை விட்டுப் போகச் செய்யும்.

தும்பிபோல் கதவு சத்திக்குமாயின் நம்பியிருக்கலாம் பிணிகள் கூடிடுமென.

அண்டத்துக் கொத்த நேர்மை யருளிய பிண்ட மாகும்
பிண்டத்துக் கொத்த நேர்மை பெருகிய கிரகமாகும்
கொண்டது நேத்திரமு நாசி, கூறிய கரங்களோடு
விண் பெருத்தி சென்னி மேவிடிற் கிரகமாமே.

The Constituent elements found in the Universe are also found in the human body Similarly Componetes Correspondence in the economy of dwelling House. A dwelling is merely then economy artful provision of head, eyes, nose, hands, stomach etc.

R. A. S. J. Vol. xxii
By R. C. Procter

மனைக்குத் தூபம்

The Post - astrologer to King Parakramabahu gives the following recipe for preparing a incense the fumes of which should drive away poisonous insect and Snakes.

Pound together pepper, ginger, licorice Sweet flag koraikilanku, kunkiliam, leaves of errukku, tulasi methukku and pudoul and burn the mixture.

R. A. S. J. Vol xxii
By. R. C. Prooter

கடுகிங்கு கொத்த மதுரம் வசம்பு
கனம் ஒரு குக்கில் வகைதான்
சுடு சுக்கு எருக்கு துளபம் மெதுக்குத்
துகளீர்புடோல் மனையிற்
கடுமிக்க தூபமிடு தேள் முசுட்டை
கடுநாகம் யாவும் மணுகா
விடுமுற்ற பேய்கள் தன தானியங்கள்
மிகு மென்பர் மேன்மையரே.

சரசோதி — மனைசெ

கம்பம்

கம்பங்களின் அடி கீழேயும், நுனி மேலேயும் இருந்தால் நன்மை. கம்பமும் தூணும் ஒன்றையே குறிக்கும். உத்தரம், விட்டம், முதலியனவற்றின் அடியை மேற்கு தெற்குத் திசைகளிலும் நுனியை வடக்கு, கிழக்குத் திசைகளிலும் வைத்தால் நன்மையுண்டாம்.

வளரும் பொருள் யாவும் வடக்கொடு கிழக்குமாக நோக்கி இருத்தல் வேண்டும். தலை, நுனி யென்பன வளரும் பாகங்கள். எனவே மரம், சட்ட, விட்டம் வாழையிலை, தேங்காய் முதலிய இவைகளின் தலை வடக்கு, கிழக்குத் திசைகளை நோக்கி வைத்தல் வேண்டும். இவ்விதி சமாந்தரமாக நோக்குகையில் சரியானது. உயரமாக நோக்குகையில் நுனி மேலேயும், அடி கீழேயும் வைத்தல் வேண்டும். இங்கேயும் வளரும் பாகம் மேலே ஆகும். கம்பம் ஒன்றாக அமைத்தல் கூடாது.

இரட்டையாக அமைத்தல் உத்தமம்
ஒற்றையாக அமைப்பது மத்திமம்
தனி ஒன்றாக அமைப்பது அதமம்.

ஒற்றையாக அமைத்த வீட்டில் கரம், கால் உபாதையும், புத்திர, சோகமும், தனித்த வாழ்வும் நோய்காணப்படுகின்றன.

வீதி யுயர்ந்து வீடு தாழ்வானால் பெண்ணுக்கும் செல்வத்திற்கும் கேடுண்டாகும். சத்துருக்களினதும் னதும் தொல்லையுண்டாகும்.

வீதிக்கும் வீட்டுக்கும் உயர்ந்திருக்க வேண்டிய அளவு 21 அங்குலமாகும். இதில் குறையக்கூடாது.

மரம்

மரங்கள் ஆண், பெண், அலியென மூவகைப் படும்.

ஆண் - ஆண் மரமானது அடி தொடக்கம் நுனி வரை ஒரே அளவான சுற்றளவைக் கொண்டதாக இருக்கும்.

பெண் - பெண் மரமானது அடி பெருத்து நுனி சிறுத்திருக்கும்.

அலி - அலிமரமானது அடி சிறுத்து நுனி பெருத் திருக்கும்.

ஆண்மரமாகில் கால்களுக்கும், தூணுக்குமாக உபயோகிக்கலாம்.

பெண்மரமாகில் வளை, உத்திரம் போதிக்கைக்கு மாக உபயோகிக்கலாம்.

அலிமரமாகில் விட்ட, சட்ட கைகளுக்குமாக உபயோகிக்கலாம்.

மனிதருக்கு அடியும், தேவருக்கு அங்குலமும் ஆகிய அளவைகளால் நிர்மாணஞ் செய்தல் வேண்டு மென எமது குரு அழுத்தந் திருத்தமாகக் கூறுவர்.

காலால் உலாவி அளந்ததினுல்தான் அளவைக்கு அடியென வரலாயிற்று. ஆங்கிலத்திலும் கூட அள வையைக் குறிக்கும். அடிக்கு Foot எனப் பொருள் தந்து நிற்கின்றது. விஷ்னு மூவடி அளவைக்கொண்டு மூவுலகளந்ததினுல் மூவடியின் பெருமையை மொழிய வும் வேண்டுமோ?

அடிக்கணக்குகளில் கூடப் பல நூல்கள் பலவித மாகக் கூறுகின்றன.

நட்சத்திரம்	கணம்
அச்சுவினி	தேவ
பரணி	மனித
கார்த்திகை	ராக்ஷத
ரோகிணி	மனித
மிருகசீரிடம்	தேவ
திருவாதிரை	மனித
புனர்பூசம்	தேவ
பூசம்	தேவ
ஆயிலியம்	ராக்ஷத
மகம்	ராக்ஷத
பூரம்	மனித
உத்தரம்	மனித
அத்தம்	தேவ
சித்திரை	ராக்ஷத
சுவாதி	தேவ
விசாகம்	ராக்ஷத
அனுஷம்	தேவ
கேட்டை	ராக்ஷத
மூலம்	ராக்ஷத
பூராடம்	மனித
உத்தராடம்	மனித
திருவோணம்	தேவ.
அவிட்டம்	ராக்ஷத
சதயம்	ராக்ஷத
பூரட்டாதி	மனித
உத்திரட்டாதி	மனித
ரேவதி	தேவ

அடிகளின் விபரம்

6	அடி	நன்மை
7	,,	மத்திமம்
8	,,	இராஜ்ஜியம்
9	,,	பீடை
10	,,	குறைவிலாச் செல்வம்
11	,,	நன்மை
12	,,	புத்திரதோஷம்
13	,,	வியாதி
14	,,	சஞ்சலம்
15	,,	உடனே துன்பம்
16	,,	மிகுந்தசெல்வம்
17	,,	எதிரிகள் அஞ்சுவார்
18	,,	இலக்குமி தரிப்பதில்லை
19	,,	மனைவிமக்கள் மரணம்
20	,,	இன்னல் தீரும்
21	,,	மூதேவி வாசம்
22	,,	எதிரிகள் அஞ்சுவர்
23	,,	தீது
24	,,	மனைவிக்குத் துன்பம்
25	,,	திருப்போகும்
26	,,	சம்பத்து
27	,,	தெய்வகடாட்சம்
28	,,	சம்பத்து
29	,,	இருநிதி
30	,,	நோய்
31	,,	மனையாள் சாவு
32	,,	இழந்தன பெறுதல்
33	,,	அரிவைரண்டு, பதியிரண்டு
34	,,	குடிவிட்டேகும்
35	,,	லக்ஷ்மி கடாட்சம்
36	,,	சுகமுண்டாம்

37	அடி	ஆண்மகவுண்டாம்
38	,,	இரக்ஷதன் குடிகொள்வான்
39	,,	நன்மையுண்டாம்
40	,,	எதிரிகள் தீது
41	,,	குபேரச்செல்வம்
42	,,	அஷ்டலஷ்மி வாசம்
43	,,	தீங்குண்டாம்
44	,,	அங்கவீனம்
45	,,	சற்புத்திரர், கலைஞானம்
46	,,	தலைவனில்லை
47	,,	எந்நாளும் வறுமை
48	,,	தீப்படும்
49	,,	மூதேவிவாசம்
50	,,	பயம்
51	,,	அற்பபுத்திரர்
52	,,	அஷ்டலஷ்மி
53	,,	வீண்செலவு
54	,,	அரசதண்டனை
55	,,	பந்து ஜனவிரோதம்
56	,,	குபேரச்செல்வம்
57	,,	புத்திரர் அற்பம்
58	,,	விரோதமுண்டு
59	,,	விசனம்
60	,,	கூடாது
61	,,	பகையுண்டு
62	,,	வறுமையுண்டு
63	,,	நல்லது
64	,,	வெகுசம்பத்துண்டு
65	,,	ஸ்திரிநாசம்
66	,,	பூபதியோகம்
67	,,	பயமுண்டு
68	,,	திரவியலாபம்
69	,,	அக்கினிஉபாதை

70	அடி	அன்னியருக்குப்பலன்
71	,,	இராஜப்பிரியம்
72	,,	வெகுபாக்கியவான்
73	,,	குதிரைகட்டி வாழ்வான்
74	,,	பிரபலவிருத்தி
75	,,	சுகமுண்டு
76	,,	புத்திரரற்பம்
77	,,	ஆனைகட்டி வாழ்வான்
78	,,	புத்திரரில்லை
79	,,	கன்று, காலி விருத்தி
80	,,	லக்ஷ்மி வாசம்
81	,,	இடிவிழும், எஜமான் மரணம்
82	,,	கர்த்தாவுக்குத் தோஷம்
83	,,	மரணபயம்
84	,,	மகிழ்ச்சியுண்டாம்
85	,,	சீமானவான்
86	,,	இம்சையுண்டு
87	,,	தண்டிகையுண்டு
88	,,	சௌக்கியமுண்டு
89	,,	பலவீடுகள் கட்டுவான்
90	,,	போகபாக்யம்
91	,,	வித்வாம்ஷம்
92	,,	ஐஸ்வரியம்
93	,,	தேசாந்திரம்
94	,,	அந்நியதேசம்
95	,,	தனவான்
96	,,	பிறதேகம்
97	,,	கப்பல் வியாபாரம்
98	,,	பிறதேசம் போவான்
99	,,	இராஜ்ஜம்
100	,,	சுகம்
101	,,	நன்மையுண்டாம்
102	,,	சிநேகம்

103	அடி	கேடு
104	,,	சமம்
105	,,	மனைவிபீடை
106	,,	செல்வம்
107	,,	ராஜபோகம்
108	,,	தெய்வ அருளுண்டு
109	,,	நன்மை
110	,,	இலக்குமிவாசம்
111	,,	மங்கலம்
112	,,	இழந்த பொருள் எய்தும்
113	,,	வெகுநன்மை
114	,,	இடம்விட்டு ஏகுதல்
115	,,	இலக்குமிவாசம்
116	,,	வலிமையுண்டாம்
117	,,	நாற்கால் விருத்தி
118	,,	மூதேவிவாசம்
119	,,	நிறைந்த செல்வம்
120	,,	கவலை

அடுக்களை, அட்டில், பாகசாலை, சமையலறை, மடைப்பள்ளி எல்லாம் ஒன்றையே குறிக்கும். வீட்டிற்கு வட கீழ்ப்பாகமாக அடுக்களை அமைத்தல் வேண்டும்.

அடுப்பும், அடுக்களையின் வடகீழ்ப்பாகமாக அமைதல் வேண்டும். இந்தியாவில் அடுக்களையை வடகீழ்ப் பாகமாக அமைத்து அடுப்பைத் தென்கிழக்கில் அமைப்பார்கள்.

ஈழத்தில் தேவாலயங்களின் மடைப்பள்ளி அக்னி மூலையில் அமைத்து அடுப்புவைப்பார்கள். ஆனால் ஈழத்தின் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலும், யாழ் கன்னாதிட்டி காளி கோவிலிலும்

வட கீழ் பாகத்தில் மடைபள்ளி அமைந்துள்ளது. வட கீழ்ப்பாகமாக அடுக்களை, அடுப்பு அமைவதால் காலைக் கதிரவனின் ஒளி எத்தனையோ கிருமிகளைக் கொல்லுமென மேலை நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். வீட்டு வாசலுக்கு அடுக்களை வாசல் செங்குத்தாக இருத்தல் வேண்டும்.


வடக்கு, தெற்கு வாயில்களுக்கு மேற்கு வாயில் அடுக்களை. கிழக்கு, மேற்கு வாயில் வீட்டுக்கு தெற்கு வாயில் அடுக்களை. கிணற்றுக்கு நேராக அடுக்களை அமைக்கக்கூடாது. சமீபமாக இருத்தல் வேண்டுமே தவிர நேராக இருத்தல் கூடாது.

நீரும் நெருப்பும் நேர்படா என்னும் முதுமொழிக்கிணங்க யாழ் மாவட்டத்தில் அமைப்பார்கள். ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் அடுக்களைக்கு நேராகவும் வீட்டுக் கட்டிடத்திற்கு நேராகவும் கிணற்றை அமைப்பார்கள். ஆனால் இதன் விளக்கம் ஆராய்தற்குரியது.

கூவல் மிதியில் நிற்கும் பெண்ணுக்கு உலை கொதிக்கிற சப்தம் கேட்க வேண்டும். எனவே அடுக்களைக்கு அருகாமையில் கிணறு இருத்தல் வேண்டுமென சிலரின் நம்பிக்கை.

வேறு சிலர் அடுக்களைக்குப் பக்கத்தில் கிணறு தேவை இல்லை. மனைக்கு வலப்பக்கமா நீர் எடுத்தலே சிறப்பென இவ்வண்ணம் கிணற்றை அமைப்பார்கள். முற்காலத்தில் வீடு வேறாகக் அடுக்களை வேறாகக் கட்டினர் அப்பொழுது பிழைகள் நேரிடா, ஒரே கூரை வீட்டுகுள் அமைக்கும் பொழுது பெரும்பான்மையாக தெற்கு மேற்கு வாயில் வீடுகளுக்கு அடுக்களை அமைப்பதில் பிழைகள் மலிகின்றன.

வீடுகளுக்கு, தென்மேற்கு மூலையில் தான் சங்குப் பேழை வைப்பார்கள். தெற்கு, மேற்கு வாயில் வீடுகளுக்கு நிலைச்சுவர் நேராக தான் கருப்ப பேழை வரும்.



இது ஒரு தெற்கு வாயில் வீடு. அடுக்களையின் வடகீழ் பாகத்தில் அடுப்பு அமைக்க வேண்டும். இரண்டும் ஒரே நேரில் சந்திக்கும். இதை எமது குரு பிழையென வாதாடினார். வீட்டுச் சுவருக்கும் அடுக்களைச் சுவருக்கும் இடையில் கட்டாய நடை பாதை அமைத்தல் வேண்டும். இப்படி அமைக்கும் பொழுது விருந்தை தாயறையிலும் பார்க்க பெருத்து விடும் என்று பயந்து பிழையாக அடுக்களையை அமைக்கின்றார்கள்.

தாயறை அகலத்திலும் பார்க்க விருந்தை பெரிதாக வரக் கூடாதென முற்காலத்து வீடுகளுக்கு இவ்விதி இன்றியமையாதது.

இப்போது ஒரு கூரையாக அமைக்கு பொழுது எல்லாச் சுவர்களும் சராசரியாக ஒரே உயரமாக அமைக்கின்றோம். தற்போதைய வீட்டு முகடு கட்டிடத்தின் அகல அளவின் நடுவில்தான் வரும். முற்காலத்தில் வீட்டின் முகடு தாயறையின் அகலத்தின் நடு

நடுவில் அமையும். முற்காலத்தில் விருந்தையாக இருக்குமிடம் தாழ்வாரமாக கருதப்படும். அப்பொழுது விருந்தை கூடினால் வாட்டம் சரிவர அமைக்க முடியாது முற்காலத்து வீட்டுக்கு இவ்விதி சரியானது.

இக்காலத்துக்கு இவ்விதி கையாளத் தேவையில்லை சிற்றுண்டிச்சாலை, விடுதி - பரணி, ஆதிரை, கேட்டை, கார்த்திகை, விசாகம், மகம், உத்திராடம், பூரம் இவைகளில் அமைக்க நன்றும்.

சாப்பாட்டு அறை - அத்தம் மிகநல்ல நாள் சாப்பாட்டு அறை அமைப்பதற்கு.

		விகற்பமாதக் கூறும் அடிகளின் விபரம்							
	நூல்கள்	21	22	30	31	33	50	51	60
1.	திருக்கணித பஞ்சாங்கம்	பி	ச	பி	பி	பி	ச	—	—
2.	சோதிட கோட்சார சிந்தாமணி	பி	ச	பி	பி	பி	—	—	—
3.	சர்வார்த்த சிற்ப சிந்தாமணி	பி	ச	பி	பி	பி	—	—	—
4.	சிற்ப சிந்தாமணி	பி	ச	பி	பி	ச	—	—	—
5.	லலிதா நவரத்தினம் முதலாம் பாகம்	ச	ச	ச	ச	ச	பி	பி	ச
6.	சிற்பநூல் பொக்கிஷம்	ச	ச	ச	ச	ச	பி	பி	ச
7.	அருட்கொடி சிற்பசாஸ்திரக் கண்ணாடி	ச	பி	ச	பி	ச	பி	ச	பி
8.	சிற்பரத்னாகரம்	ச	பி	ச	ச	ச	—	—	—
9.	சோதிடப் பேரகராதி	ச	ச	ச	ச	ச	—	—	—
10.	மனையடி சாஸ்திரம்	ச	ச	ச	ச	ச	—	—	—
11.	சிற்பசாஸ்திரக் களஞ்சியம்	ச	பி	ச	ச	ச	ச	ச	ச
12.	மனையலங்காரம்	பி	ச	பி	பி	பி	ச	பி	—
13.	சோதிடக் கிரக சிந்தாமணி	—	—	—	—	—	—	—	—
14.	சிற்ப நூல் சாரம்	ச	பி	ச	ச	ச	—	—	—
15.	அபிதான சிந்தாமணி	ச	ச	ச	ச	ச			
16.	சிற்பரகசியம்	—	—	—	—	—	—	—	—

சிற்பரகசிய நூலாசிரியர் இரண்டு கருத்துக்களையும் தெரிவித்து இருக்கின்றார். தனது அனுபவத்தைத் தெரிவிக்கவில்லை.

22 அடி — எதிரிகள் அஞ்சுவர் என்பாருமுளர்.
— மூதேவி வாசம் என்பாருமுளர்.

நீர்

நீரின்றி ஓர் உயிர்களும் உயிர்வாழ முடியாது. நீரைத் தாய்க்கு உவமித்தனர். "தாயைப் பழித்தாலும், தண்ணீரைப் பழிக்காதே" என்பது பழமொழி.

"நீரகம் பொருந்திய ஊரகத்திரு" எனவும்
"ஆறில்லாவூருக்கு அழகுபாழ்" எனவும்
"வரம்புயர நீருயரும்" எனவும்
"வானம் வழங்காவிடின் தானம் தவமிரண்டுந் தங்காது" எனவும் பண்டைய புலவர்கள் புகழ்மாலை சூட்டினர்.

வீட்டிலும் பார்க்கக் கிணறு இன்றியமையாதது. வீடுகட்ட முன் கிணறு வெட்ட வேண்டுமென்பது மூதறிஞர் வாக்கு. வீடு கட்டின பின் நீர் வசதியில்லாவிடின் காணிக்கும், மனைக்கும் உள்ள விலைமதிப்புக் குறைந்துவிடும், சிவர் வீடு கட்டின பின்னர் கிணறு வெட்டினால், கட்டிடத்தைக் கிணற்றுக்கு வெடி வைப்பதின் மூலம் பழுதாக்க நேரிடுமெனவும் காரணம் காட்டுவர். யார் எதைச் சொன்னாலும் பழைய ஞானிகள் சொன்ன மொழிகள் யாவும் பொய்யா மொழியே. முக்காலத்திற்கும் முழுதுணர்ந்து பயன்பெறு மொழியே முனிவர்கள் மொழி.

ஜலம் எங்கிருக்கலாம் என்று கண்டு பிடிப்பதெப்படி?

(1) ஏதாவது ஒரு வெட்ட வெளியில் அதாவது சம பூமி ஸ்தலத்தில் எங்கு வெட்டினால் சீக்கிரம் கிடைக்கும் என்ற சர்ச்சை உண்டாகும். எவ்விடம் புல் பூண்டு மிகுதியாகக் காணப்படுகின்றனவோ அவ்விடத்தைக் தோண்டினால் ஜலம் சீக்கிரம் கிடைக்குமென்பது அடையாளம். ஏனெனில் ஜலக்கசிவு மேலால் இருப்பதால் தான் புல் பூண்டு அவ் வண்ணம் செழிப்பாகக் காணப்படுகின்றன. புல் பூண்டுகள் காணப்படாவிட்டால் காலையில் எங்கு அதிக பனி விழுந்திருக்கின்றதோ, எவ்விடத்தில் பூச்சிகள் மொய்க்கின்றனவோ, அவ்விடத்தில் ஜலம் சமீபத்திலிருக்கும் என்று பிரசித்த தத்துவ சஸ்திரிகள் சொல்லுகிறார்கள். தண்ணீரைப்பற்றி 1882 ஏப்பிரல் 1ம் தகதி Dr. M. C. Furnell துரை அவர்கள் தாம் செய்த ஒரு பிரசங்கத்தில் தமது நாட்டவர்கள் குணகுணங்களைப் பற்றி தமது பழைய கிரந்தங்களில் எழுதியிருப்பதைச் சொல்லியிருக்கிறார். சுகசந்தானதீபிகை

கல்வியங்காட்டைச் சேர்த்த வைத்திய கலாநிதி கா. இராமசாமி அவர்கள் பின்வரும் இரு விதிகளைக் கூறினார்கள்.

(i) நவதானிய அரையலைக் கிணறு எடுக்கும் காணிக்குள் முதல் நாள் இரவு தூவ வேண்டும். ஏனெனில், பட்சிகள், ஊர்வன முதலியன நவதானிய அரையலைச் சேதப்படுத்த மாட்டா. அடுத்தநாள் அதிகாலையில் கவனிக்க எறும்பு முதலிய ஜந்துக்கள் எல்லாம் இவைகளைச் சேகரித்து ஒரே இடத்தில் கொண்டுபோன அறிகுறிகள் தென்படும். அதில் வெட்டினால் நன்னீராம். அனுபவரீதியாக நான் கையாண்டு பலன் அடைந்தேன் என்கிறார்.

(ii) கோழிகள் இறகைக் காய்ச்சுவதைக் கண்டிருக்கின்றோமல்லவா? அதுவும் குளிர்ந்த நீர் உள்ள இடத்தில் தான் புரண்டு இறகை காய்ச்சும். அவ்விடத்தில் வெட்டினால் நன்னீராம் என்றார். இது போன்று பல இயற்கைக் கவனிப்புகள் பலவுள. விரிவஞ்சி எழுதாது விடுகின்றேன்.

சிலரின் இரத்தத்தின் தன்மையால் நன்னீரைக் கண்டு பிடிக்கலாம். அது எங்ஙன மெனில் உரிய இரத்தத்தின் தன்மை உள்ளவர்கள் புளியங்கொப்பு, அலரிக் கொப்பு, அத்திக் கொப்பு, மெல்லிய இரும்பு, பித்தளைக் கம்பிகள் முதலிய வகைகள் ஒன்றைக் கைகளில் பிடித்துக்கொண்டு கிணறு எடுக்கும் இடங்களில் உலாவ, இவை வலமாகச் சுழன்றால் நன்னீராம். இவை இடமாகச் சுழன்றால் உவர் நீராம். சுழற்சியின் வேகத்தைக் கொண்டும் நல்ல ஊற்றையறியலாம். இந்தச் செயல்களில் ஈடுபட்டுச் சமூகத்தின் மத்தியில் நல்ல மதிப்பைப் பெற்று வருபவர்களின் பெயரும் விலாசமும்:-

திரு. கிருஷ்ணபிள்ளை — மன்னார்
திரு. கணேசலிங்கம் — கரவெட்டி
திரு நிர்குணானந்தன் — நீர்வேலி
திருமதி. தங்கேஸ்வரி சுப்பிரமணியம் ஆகிய எனது மனைவியாவர்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மக்கள் கவிமணி திரு. மு. இராமலிங்கம் அவர்கள் ஒரு விதியைச் சொன்னார். இவ்விதி தம் பாட்டனார் சொன்னதாகவும், உண்மையாக அனுபவத்தில் தாம் கண்டதாகவும் கூறினார். அவ்விதியாவது:-

பால் சுரக்கும் பசுக்களைக் கிணறு வெட்டும் காணிக்குள் சுதந்திரமாக மேய விடுதல் வேண்டும். இவைகள் மேய்ந்து விட்டு குளிர்ச்சியான இடத்தில்

படுக்கின்றன. கிணறு வெட்டும் காணி அடைப்புள்ளதாக இருத்தல் வேண்டும். படுத்த இடங்களை நான்கு, ஐந்து, நாட்கள் கவனித்தால் அவைகள் (பசுக்கள்) ஒரே இடத்தில் படுத்ததைக் கவனிக்கலாம். படுத்த இடத்தை வெட்டினால் வற்றாத வாவியாகும்.

கிணறு வெட்ட உத்தேசிக்கின்ற பூமியில் சூரியாஸ்தமன மானவுடன் நல்ல தும்பைப் புஷ்பத்தையாவது, முல்லைப் புஷ்பத்தையாவது அவ்விடத்தில் வைத்தல் வேண்டும். விடியற் காலையில் அந்தப் பூவை எடுத்துப் பார்க்க வாடாமல் இருந்தால் நல்ல ஜலமிருக்கிறதென அறியவும்.

தோற்றுமனைக்கே கூவலிடம்
    தோன்றில் சென்மமுயிர் கேடாம்
போற்றுமிரண்டிற் பொருள்கேடாம்
    பூவாய் மூன்றும் துணைவர் கெடும்
ஆற்றும் நாலில் மாதர்பிணி ஆகா
    ஐந்தில் புதல்வர் கெடும்
சாற்றும் மனைக்கே நடுவாகும்
    சண்டர்க்கிரையாம் தாழ்வாமே. 1

ஆமேயேழில் மனை நன்றாம்
    ஆமொன்றார்கே டெட்டாகில்
போமேதுன்பம் ஒன்பானும்
    பொருந்துமுயற்சி பத்தாகில்
தாமே பன்னொன்று மதியம்
    தானாக மயனார் சொன்னார்
சாமே வியமாந்தார் குழலாள்
    கூவலிட மிதுவே. 2

வாறுகேள் மனைக்கு முன்னாய்
    வலதிசை கூவல் தோன்றி
மீறிய செல்வமுண்டாம்
    மிகுபொருள் வந்துசேரும்

தேறிட திடமே கூவல்
தோன்றிடில் நசிக்கும் சிவன்
கூறிய மொழி தப்பாது
கூற்றனுக் கிடமதாமே 3

இடபாமாம் மனைக்கு கூவல்விளங்கவே தனுவாம் ராசி
நடமிடும் பாகை பன்னைந்து தள்ளினும் தேளிராசி
அடவுடன் பின்னுல் ஐந்தோடிரண்டரையும் மிகவும்
[நன்ரும்
திடமுடன் செல்வஞ்சேர்ந்து சிறப்புடன் வாழ்வதாமே

சிங்கமாம் மனைக்குக் கூவல் சிறந்திடு மீனராசி
தாங்கிய பாகை பன்னைந்து தன்னினும் கலராசி
மங்கையே பின்னுனைந்து தோரெண்டரையும் நன்ரு
பொங்குமால் திருவுஞ்சேர்வாள் பொலிவிருந்திடு
கலராசி-கும்பராசி [மனையாமே 5

விருச்சிக மனைக்குக் கூவல் விளங்குடு மிதுனந்தன்னில்
அருட்சியாய் பாகை பன்னைந்து தள்ளினுமிடபராசி
உருட்சியாய் பின்னுலைந்து தோடுடிரண்டரையும்
[மிகவும் நன்ரும்
பொருட்சிதை விராது பூமி புகலிடமிதுவாம் பாரே. 6

கும்பமாம் மனைக்குக் கூவல் குறித்திடு மடந்தை
[தன்னில்
நம்பியே பாகை பன்னைந்து தள்ளினும் சிங்கராசி
எம்பியே பின்னுலைந்து தோடுடிரண்டரையும் மிகவும்
[நன்ரும்
தும்பிமாமுகனுர் நன்மை துலங்கிடு வாழ்வதாமே. 7

ஆக்கமா மனைக்குக் கூவலளவு தானறிய வேண்டில்
தாக்கிய முழக்கோலான தன்மையின் முழமிண்டாய்
நீக்கிய கோலாலேழும் பதிமூன்றும் நிறைந்த செல்வம்
பாக்கியம் பன்னேழோடே இருபத்தேழ்
[பல்லுண்டாகும் 8

ஒன்ருகி யிரண்டாகியொரு மூன்ருய் நாலாகி
குன்ருத சாதிசதுர்க் கோணமிட்டு - நன்ருக
பாகையளவாய் பகருமில்லாக் கூவலிடல்
வாகை திருவாழ்வாம் பதி. 9

சந்திரனுர் முற்கூறும் சலராசி பிற்கூறும்
எந்தனுடைய பாகமிரு கூரும் - சுந்தரஞ்சேர்
தீயவர் சேரோரை திறனுடைய கூவலெல்லாம்
நோயகலிதேயது மனநேர். 10


அ. செ. கை. பி.



கிணறு இருக்கும் இராசியும் தன்மையும்


வாசகர்களுக்கு இலகுவில் விளங்கும் பொருட்டு சோதிடச் சொற்களையும், வழக்குச் சொற்களையும் பின்னுல் நேர்பட விளக்குவாம்.

மேடம் —	கிழக்கு	கற்பாறை
இடபம் —	கிழக்கு	நன்னீர்
மிதுனம் —	தென் கிழக்கு	கடற்கரை
கடகம் —	தெற்கு	அதிக நீரூற்று
சிங்கம் —	தெற்கு	கற்பாறை
கன்னி —	தென் மேற்கு	தெற்கு மோழை
துலாம் —	மேற்கு	புற்று
விருச்சிகம் —	மேற்கு	பாழ்ங்கிணறு
தனு —	வட மேற்கு	கிழக்கில் மோழை
மகரம் —	வடக்கு	இடிகரை
கும்பம் —	வடக்கு	குடலைக் கல்லு
மீனம் —	வட கிழக்கு	தெற்கு கல்லு



கிழக்கு வாயில் வீட்டுக்கு வருணபாகத்தில் கிணறு அமைவதாயின், இடபத்தில் வரும். ஈசானியமாகிய கும்பக் கிணறும் பொருந்தும்.

எவ்வாயில் வீடாக இருந்தாலும் ஈசானிய கிணறு பொருந்தும் என்பர் மூதறிவாளர். இதையே மாறி இடப வீட்டுக்கு விருச்சிகத்திலும் கும்பத்திலும் கிணறு அமைக்கலாம்.



வடக்கு வாயில் வீட்டுக்கு கும்பத்தில்தான் கிணறு அமைத்தல் வேண்டும்.

இதையே மாறி கும்ப வீட்டுக்கு, சிங்கத்தில் கிணறு அமைக்கலாம்.

கிணறு இருக்கும் திசையும் பலனும்

கிழக்கு	—	செல்வம்
தென்கிழக்கு	—	புத்திர நாசம்
தெற்கு	—	ஸ்திரி நாசம்

தென்மேற்கு	—	மரணம்
மேற்கு	—	சம்பத்து
வட மேற்கு	—	சத்துருபீடை
வடக்கு	—	ஆரோக்கியம்
வடகிழக்கு	—	சந்தோஷம்
நடு	—	பொருள் அழிவு

எக்காரணத்தைக் கொண்டும் காணியின் மத்தியில் கிணறு அமைக்கக்கூடாது. அப்படி அமைத்தால் பொருள் அழிவும், உயிர்ச் சேதமும் உண்டாகும். எமது குரு மையத்தில் கிணறெடுத்தால், மையம் வருமென்பர்.

மையம் — பிரேதம், நடு

சினேந்திரமாலையும், விதானமாலையும் ஆகிய இரு நூல்கள் நடுக் கிணறு நன்மை பயக்குமெனச் சாற்றுகின்றன. இது தனி மனைக்குப் பொருந்தாது. ஊருக்கும் துரவுக்கும் நடுவில் கிணறு அமைப்பதற்குப் பொருந்தும்.

கிணற்றினல் வரும் தோஷத்தை இடையில் தெரு, பொதுப்பாதை, வேலி இருந்தால் நீக்கும். ஆன்றோர் கிணற்றைத் தாய்க்கு உவமைப்படுத்தினர். தாய் எங்கிருந்தாலும் தனது பிள்ளையைப் பாதுகாப்பாள். இதே போல் கிணறும், மனைக்கு எந்தத்திசையில் இருந்தாலும் தோஷம் செய்யாது, நன்மை பயக்கும். ஆனல் வீட்டுக்கு நேராகவும், அடுக்களைக்கு நேராகவும் அமைத்தல் கூடாது.

எந்த வாயில் வீடாக இருந்தாலும் ஈசானியக் கிணறு பொருந்துமெனவும், வலப்பாகத்தில் வரும் கிணற்றுக்கு திசைக் குற்றம் இல்லையெனவும் பொது விதி. சிங்கராசி வீட்டுக்கு 7 வது பாகமாகக் கும்பக் கிணறு அமையும். சிலர் மீனராசியில் கிணறு அமைத்து விட்டு கும்பக் கிணறு என்றும், ஈசானியக் கிணறு என்றும் மயங்குவர். இது பிழையாகும்.

இராசிப் பிரமாணத்தில் கும்பம் வடக்குத் திசை.
இராசிப் பிரமாணத்தில் மீனம் வடகீழ்த் திசை.

சிங்கமனைக்கு மீனராசியில் (ஈசானிய)க் கிணறு அமைத்தால் எட்டாம் இராசிக் கிணருக அமையும். கிணற்றுக்காவது, வழிக்காவது, மனையிராசி 6, 8, 12 ஆக அமையக்கூடாது.

கிணறுவெட்ட கூபாரூடம்

கிணறு, கேணி முதலிய நீர்நிலைகள் வெட்டுவதற்கு பூமிக்குக் கீழுள்ளவற்றை ஆரூட முறையாகக் காண்பது. விவரம் - கிணறு முதலியவை வெட்ட உத்தேசித்த விடத்தை சுத்தஞ் செய்து குல தேவதையைத் தொழுது அவ்விடத்தில் ஒருவனைக் கிழக்கு முகமாக வைத்து அவன் அங்கத்தில் மற்றொருவனைக் கொண்டு தொடச் செய்து தொட்ட அங்கத்தைக் கொண்டு பலன் அறியலாம். அவையாவன.

தொடும் உறுப்பு		பலன்
1. தலை	—	6 அடிக்குக் கீழ் வடமேல் மூலையில் அதிக நீரூற்றும், தவளையும், அதன் கீழ் 4½ அடியில் வெகு நீரூற்றுமுண்டாம்,
2. நெற்றி	—	கற்பாறையும் 25 அடியில் குறைந்த நீரூற்றுமுண்டாம்.
3. கன்னம்	—	9 அடியில் நல்ல தண்ணீர் ஊறும்.
4. வாய்	—	13½ அடியில் நீரூற்றும் கல்லுமுண்டாம்.
5. முகம்	—	9 அடியில் நீரூற்றுண்டாம்.
6. கழுத்து	—	25 அடியில் நீரூற்றுண்டாம்.
7. தோள்	—	13 அடியில் பெருமடையான நீரூற்றுண்டாம்.

8. மார்பு — கற்பாறையும், அதன் கீழ் 4½ அடியில் தென்கீழ் மூலையில் நல்ல ஊற்று முண்டாம்.
9. கை — வெகு சமீபத்தில் ஊற்றுண்டு
10. விரல் — 13 அடியில் பெருமடையுண்டாம்
11. நகம் — பழைய கிணறு, 15 அடிக்கும் கிழக்கில் சிறு ஊற்று முண்டாம்.
12. இடுப்பு — ஊற்றில்லை.
13. தொடை — 9 அடியில் ஊற்றுண்டாம்.
14. முழங்கால் — 7½ அடியில் பெருமடையுண்டாம்.
15. கணுக்கால் — பெருமடையுண்டாம்.
16. பாதம் — நீரில்லையாம்.

குறிப்பு:- இது என் தந்தையாரெழுதி வைத்திருந்த பழைய ஏட்டுப் பிரதியிலிருநது எடுத்தெழுதப் பட்டதென பதிப்பாசியர் கூறுகிறார்.

சோதிடப் பேரகராதி

சோதிடப் பேரகராதியில் உள்ளபடியே இதில் பிரசுரித்துள்ளேன். முழுக்கணக்கில் இருந்த அளவுகளை மாத்திரம் அடி அளவையில் மாற்றி எழுதியுள்ளேன். வாசகர்கள் இலகுவாக அறிதற் பொருட்டேயாம்

தேங்காய்ச் சகுனம்

1. முடி பெருத்து அடி சிறுத்தால் இலட்சுமி வாசம்.
2. மூன்று பங்கு சிரசிலும் ஒரு பங்கு பாதத்திலுமானால் சந்தோஷமுண்டு.
3. நாம்பு பிடித்தால் நீடுழி வாழ்வார்கள்.
4. கடுகுப் பிரமாணம் சிதன் உள்ளே விழுந்தால் இரத்தினம் சேரும்.

5. நடுவிற் பிளந்தால் துயரத்தை விளைக்கும்.
6. நடு மத்தியில் உடைந்தால் நன்மை.
7. ஆறு, நாலாக, உடைந்தால் வெகு துன்பம்.
8. தேங்காய்க்கண் தெறித்தால் எஜமான் மரணம்
9. தேங்காய் தவறிப் பூமியில் விழுந்தால் மனைவிக்கும் நாசம். திருமகளும் நில்லாள்.
10. ஓடுவிட்டால் வறுமையுண்டாகும்.
11. அழுகல் அல்லது ஒல்லியிருந்தால் - அதிக மனஸ்தாப முண்டாம்.

(மு. க.) தேங்காய் உடைக்கும் பொழுது புறக் கத்தியால் உடைக்க வேண்டும். உள் கத்தியால் உடைப்பது கூடாது. இது அழிவு, பெலிக்குத்தான் உடைப்பது. புறக் கத்தியால் உடைக்க முடியாவிட்டால் மூன்று தரமாவது புறக்கத்தியால் தட்டிவிட்டு உள் கத்தியால் உடைக்கலாம்.

குடிபுகுதல்

"தாழொடு கதவுமின்றி தரைசுவர் தீற்றலின்றி
கோளுறு பலியுமின்றி கூரைமேல் வேய்தலின்றி
நீள்பசுவுறைதலின்றி நீடகம் புகுவராயிற்
கேளிரும் பொருளும் தானும் கெடுவது திண்ணமே"
(ச. மாலை)

"கதவில் பூட்டுப் போடாமலும், தரையும் சுவரும் பூசாமலும், கூரைவேயாமலும், கோப்பிரவேசம் செய்யாமலும் வீடு குடி புகுதல் கூடாது. அவ்வாறு புகுவராயின், சுற்றமித்திரரும், பொருளும், தலைவனுக்குக் கேடும் வருவது உண்மை."

குடி புகுவதற்கு வேண்டிய பொருட்கள்

கும்பம், தீபம், பால், பழம், நெல், பொன், புஷ்பம், சந்தனம், புடவை, மஞ்சள் முதலியவைகளை காம ரூப

சுமங்கலிகள் சூழ்ந்து கொண்டுவர மங்கல வாத்தியம் முழங்க, கிரகப் பிரவேசம் செய்யவும், நவக்கிரக ஓமம் செய்து தாம்பூலம் அளிக்கவும்.

குடி புகுதல்

தை, சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை இவைகள் குடி புகுதற்குரிய மாதங்களாகும்.

நட்சத்திரம்

விலக்கப்பட்டது:- திருவாதிரை, கார்த்திகை, பூரட்டாதி, பூராடம், கேட்டை, மூலம், ஆயிலியம் விசாகம், அனுட்டம்.

இராசி:

ஸ்திரராசி	—	உத்தமம்
உபயராசி	—	மத்திமம்
சரராசி	—	அதமம்

திதி விலக்கப்பட்டது

மூவிருத்தை	—	சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி
உவா	—	அமாவாசை - பூரணை

வாரம்: திங்கள், புதன், வியாழன், வெள்ளி, வாரங்கள் புக நன்றதாம்.

வாரத்தின் தன்மை

ஞாயிறு	—	ஒரு கண் வாரம்
சனி, செவ்வாய்	—	குருட்டு வாரம்
திங்கள்	—	இருகண் வாரம்
புதன்	—	இருகண் வாரம்
வியாழன்	—	இருகண் வாரம்
வெள்ளி	—	இருகண் வாரம்

குடிபுகும் வாரபலன்

ஞாயிறு	—	சம்பத்துண்டாம்
திங்கள்	—	இலட்சுமி கடாட்சம்
செவ்வாய்	—	தீராத சண்டையுண்டாம்
புதன்	—	இரு நிதி சேரும்
வியாழன்	—	சம்பத்துண்டாம்
வெள்ளி	—	மத்திமம்
சனி	—	சுகமுண்டாம்

சில நூல்கள் வெள்ளி உத்தமமெனவும், சனி, ஞாயிறு மத்திமமெனவும் கூறுகின்றன, இக் காலத்தில் சனியும் ஞாயிறும் ஒய்வு நாளாக இருக்கின்றமையால் பெரும்பான்மையினர் சகல முகூர்த்தங்களுக்கும் உத்தமமாகக் கைக்கொள்ளுகின்றனர். அதுவுமல்லாமல் பஞ்சாங்க கணிதர்களேயும் சனி, ஞாயிறு காலங்களில் முகூர்த்தங்கள் வைக்கும்படி பணிக்கின்றனர். இலங்கையில் போயா (பூரணை) நாட்களில் சுபநாள் வைத்தால் கணிதருக்கு மதிப்பேற்படும்.

கிணறு வெட்ட உத்தமமான காலம்

கிணறு வெட்டுவதற்கு இடச்சுத்தம் முதலியன.

கிணற்றுக்கு	—	4 மிடமும்
ஆற்றுக்கு	—	7 மிடமும்
குளத்திற்கு	—	10 மிடமும்
தாங்கிக்கு	—	1 மிடமும்

போன்ற இடங்கள் சுத்தமாக இருத்தல் வேண்டும். கிணறு வெட்டுவதற்கு உத்தமமான நட்சத்திரம்.

மகம், உத்திரம், உத்திராடம், உரோகிணி, பூசம், ரேவதி, அத்தம், கேட்டை, அனுஷம், திருவோணம் முதலிய நட்சத்திரங்களும் திங்கள், புதன், வியாழன், வெள்ளி சேர்ந்த வாரங்களும் நல்லது.

இடபம், கடகம், கும்பம், மீனம், மகரம் பொருந்திய வேளையிலும்

பத்திரை, இருத்தை, அகற்றிய மற்றைத்திதிகளிலும் வெட்ட நன்றாம்

பத்திரை — துதிகை, சத்தமி, துவாதசி, இருத்தை சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி

கிணறு வெட்டும் மாதபலன்

சித்திரை	—	தனலாபம்
வைகாசி	—	தானியலாபம்
ஆனி	—	பயம்
ஆடி	—	சோகம்
ஆவணி	—	சுகம்
புரட்டாதி	—	பயம்
ஐப்பசி	—	வருத்தம்
கார்த்திகை	—	துக்கம்
மார்கழி	—	கீர்த்தி
தை	—	திரவிய லாபம்
மாசி	—	அக்கினி பயம்
பங்குனி	—	நன்மை

ஊரிலாவது, கிராமத்திலாவது ஊருணிக் கிணறு வெட்டுவித்தவருக்கு, விஷ்ணுவின் அருள் பாலிக்மென விஸ்வகாம பிரகாகிகை கூறுகின்றது.

துலாநிலை

இதனை ஆடுகாலெனவும் அழைப்பர் இதுகிணற்றிற்கு வடக்கு, அல்லது கிழக்குப் பாகத்தில் அமைக்க வேண்டும். வீட்டுக்கு அடித்துலா தாக்காதவாறும், நுனித்துலா வீட்டுப் பக்கத்தை பார்க்கும் படியும் அமைத்தல் வேண்டும்.

இன்னும் சிலர் கிழக்குப் பாகத்தில் அமைக்கும் துலா நிலையிலும் வடக்கே அமைக்கும் துலாநிலை சாலச் சிறந்ததென்பர். ஏனெனில், கிழக்குப்பாகத்தில்

அமைக்கும் துலாவின் நிழல் கூடிய பாகமாக வடக்கில் அமைக்கும் துலாவின் நிழலிலும் தோற்றும்.

பட்டைக் கிடங்கு: நீர் அள்ளுவதற்கு சுலபமாக கிணற்றின் வட-மேற்கு அல்லது தென்-மேற்குப் பாகத்தில் அமைக்கும் கிடங்கு. தண்ணீர் அள்ளும் பொழுது வலக்கைப்பாகம் சரித்து அள்ளவே இதை அமைப்பர்

தொட்டி, பீலி, சலவைக்கல்

ஆடுகாலின் பக்கமே தொட்டி, பீலி முதலியன அமைத்தல் வேண்டும். இதுவும் வடக்கே அல்லது கிழக்கே தான் அமையும். இதில் இரு உண்மைகள் புலனாகின்றன.

1. விஞ்ஞான முறைப்படி இழுவை துலா நிலையின் பக்கமே இருத்தலால் நீரிறைப்பதற்குச் சுலபம்.
2. இறைக்கும் நீரும், உபயோகிக்கும் நீரும் வடக்கு அல்லது கிழக்கு முகமாக ஏகும்.

கிணற்றுமிதி

வடக்கு அல்லது கிழக்கு முகமாகவேனும் பார்த்து நீர் அள்ளத்தகுந்ததாக கிணற்றுமிதி அமைத்தல் வேண்டும். மாற்று முறையாகக் கூறினால் கிணற்றுமிதி, பத்தல் முதலியன கிணற்றுக்கு மேற்கு அல்லது தெற்குப் பாகமாக அமையும்.

கிணற்றின் வடிவம்

வட்டமாகவும், சதுரமாகவும் கிணறு வெட்டல் வேண்டும். முக்கோணமாக வெட்டலாம் என விஷ்ம கர்மபிரகாசிகை கூறுகின்றது. வீட்டிற்குக் கிணறு வட்டமாக வெட்டல் வேண்டுமென்பது பொதுவிதி. வட்டமாக வெட்டுவதால் அமுக்கம் (Thrust) கிணற்றின் மத்தியில் தாக்கும். இதனால் கட்டிடம் பழுதடையாது. இதனாலன்றோ, முற்காலத்தில் எமது மூதாதையர் வட்ட

வீடு (குடில்) வட்டச்சுவர் (ARC) மணிக்கூட்டுகோபுரம் எல்லாம் வட்டவடிவத்தில் அமைத்திருக்கின்றார்கள்.

இன்றும் இக்கட்டிடங்கள் பழுதடையவில்லை. சென்ற 10 ஆண்டுகளுக்குள்ளாக, இலங்கைக்கட்டிடக் கூட்டுத்தாபனம் தாங்கள் அமைக்கும் நீர்த்தாங்கிகளை வட்டமாகக் கட்டுவதை நாங்கள் இன்று பரக்கக் காணலாம். வட்டமாக இருப்பதால் சூரியஒளியும் நிரம்பப் பெற்று நீர் சுத்த மடைகின்றது.

கிணற்றின் அளவு

வீட்டுக்கு ஆயப் பொருத்தம் கணிப்பது போல் கிணற்றுக்கும் கணித்தல் வேண்டும். இதன் புறச்சுற்றைக் கணித்து அதற்குரிய ஆயப்பொருத்தத்தை அறிதல் வேண்டும்.

நெற்றியை மூன்று பங்கு செய்தது சுற்றளவாமென்றவிதிக் கிணங்க உள்விட்டத்தை 3 ஆல் பெருக்கல் வேண்டும். இதிலிருந்தும் பெறுவதென்ன கிணறு வட்டமாகத்தான் மூதாதையோர் வெட்டி இருக்கின்றார்கள்.

$$\text{வட்டத்தின் சுற்றளவு} = \pi \times \text{விட்டம்}$$
$$= \tfrac{22}{7} \times \text{விட்டம்}$$
$$= 3{\cdot}14 \times \text{விட்டம்}$$

விஷ்மகர்மியர்கள் காப்புச் செய்யும் பொழுது உள் அளவை மூன்று தரம் ஈர்க்கால் அளந்து உரிய காப்பைச் செய்வார்கள்.

எங்கள் நெற்றியின் அளவை 3 ஆல் பெருக்கினால் தலையின் சுற்றளவு பெறப்படும்.

சதுரமான கிணறு, குளம், கேணி, முதலியன நீர் நிலைகளுக்கு இதன் சுற்றளவைக் கண்டு ஆயப்பொருத்தம் கணிக்கவும்.

வடக்கு, அல்லது கிழக்குப் பாகத்தில் தான் சகல நீர்களும் ஏகவேண்டுமென விதித்ததில் உண்மைஉண்டு

வடக்கு தெற்காக நிலத்தில் காந்தம் இருக்கிறது. வடக்கு, அல்லது கிழக்கு முகமாக போகும் நீரில் உள்ள தாதுமூல உலோகப் பொருட்களை வெளியே செல்லவிடாது. தன்பால் ஈர்க்கும். இத்தாதுமூலப் பொருட்கள் பூமியில் வாழும் மக்கள், மாக்கள், மரங்கள், ஊர்வன போன்ற ஏழுவகைப் பிறப்புகளுக்கும் தேவையானவை.

இதனாலன்றோ, தெற்கு மேற்கு தாழ்ந்த பூமிகூடாதென்று கூறினர். ஒருகாணிக்குள் தெற்குமேற்குபாகம் உயரவேண்டும். உயர்ந்தால் தான் வடக்கும் கிழக்கும் நீர் பாய்வதற்கு சுலபம்,பட்டடைக்காணியின் மேற்குப் பாகத்தில் குவிதல் வேண்டுமெனவும், குப்பை தெற்கில் சேகரித்தல் வேண்டுமெனவும் கூறியது காணியின் உயர்ச்சியையும் நீரோட்டத்தையும் கருதியே.

''பட்டி கிழக்கு பட்டடை மேற்கு'' — பழமொழி

மல சல கூடம்

மல சல கூடம் வடகிழக்குத்திற்கையொழிந்த மற்ற ஏழு திக்குகளிலும் அமைக்கலாம். முக்கியமாக மலக்குழியைத் தான் கவனிக்க வேண்டும். ஊருணி, கிணறு முதலிய நீர் நிலைகளினின்று 35 அடிக்கப்பால் மலக்குழி வகுத்தல் வேண்டும். தாயறைக்கு அகலப்பாட்டிற்கும் நீளப்பாட்டிற்கும் நேராக வராது அமைத்தல் வேண்டும்.

பகலிலே வடக்கு முகமாக வேணும், இரவில் தெற்கு முகமாக வேணும் நோக்கி மல சலம் கழித்தல் வேண்டுமென ஆசாரக் கோவை சாற்றுகின்றது. பெரும்பாலும் பகலில் உபயோகிப்பதால் வடக்கு நோக்கி ஆசனத்தை அமைக்கலாம்.

குளியலறை

வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாக வேனும் நோக்கிக் குளித்தல் வேண்டும். ஆற்றுக்கு மாத்திரம் எதிர்த்திசை நோக்கிக் குளித்தல் வேண்டும். எனவே குளியலறையை வடக்கு அல்லது கிழக்கு நோக்கி குளிக்கத் தகுந்ததாக அமைத்தல் வேண்டும்.

நீர்த் தொட்டி

இதுவும் தாயறைக்கு இருபாலும் நேராக வராத வாறும், புகைக் கூட்டுக்கு மேலாக வராத வாறும் அமைத்தல் வேண்டும். புகைக்கூட்டுக்கு மேல் அமைத்த இல்லங்களில் இருப்பவர்களை இருதய, இரத்தவ முக்கம், நீரிழிவு, முதலிய நோய்களினல் பீடிக்கப் பட்டிருக்கிறுர்கள்.

செஞ்சிதல் எழுதலின் பலன்

சிதல்	—	கறையான், சிவந்த கறையான் எழுதலின் பலன்
கிழக்கு	—	கேடு
தெ. கிழக்கு	—	விருந்தூறும்
தெற்கு	—	இன்பம்
தெ. மேற்கு	—	மாரி
மேற்கு	—	வாழ்வு
வ. மேற்கு	—	மனைவிக்கு கேடு
வடக்கு	—	மேன்மை
வட கிழக்கு	—	துன்பம்
உச்சி	—	சுபம்

இவ்விதம் இது சரசோதி மாலையில் காணப்படு கின்றது. இவ்வளவையும் கூறி மேலதிகமாக கூறுகின் றது, சூடா மணி உள்ள முடையான்.

தொழுவம்	வியாதி
கட்டில் கீழ்	,,
வாசல்படி கீழ்	,,
அடுக்களை கீழ்	,,
தேவஸ்தானம்	,,
ஊருணி	நாடு கெடும்
அம்பலம்	,,
பள்ளி	,,
சுவர்	நன்று

வருடப் பிறப்பும் வானிலையும்

வருடப் பிறப்பு, ஆடிப்பூர்வ பக்ஷபஞ்சமி, ஆடிப் பூரம், சூரியன் திருவாதிரைக்குப் போகும் வாரம்.

திங்கள் வெள்ளி ஆயின்	—	நல்ல மழை
செவ்வாய் ஆயின்	—	வரட்சி
சனி, ஞாயிறு ஆயின்	—	மழை இல்லை
புதன் ஆயின்	—	மழையும் காற்றும்
வியாழன் ஆயின்	—	இரு போக மழை

ஒவ்வொரு மாதத்திலும் ரோகிணி, சுவாதி, பூரட்டாதி நட்சத்திரங்களில் மேகம் இருண்டு மந்தா ரம், தூறல் இருக்குமாயின் அவ்வாண்டு மாரி நிறை யப் பெய்யும்.

ஒற்றித்த மாதங்களில் 2-ம் திகதியும் இரட்டித்த மாதங்களில் 1-ம் திகதியும் மழை பெய்யக் கூடிய அறிகுறிகள் காணப்பட்டால் அவ்வாண்டு நல்ல மழை யாம்.

சித்திரை ஒற்றித்ததும் வைகாசி இரட்டித்ததும் ஆக பங்குனி வரை முறையே கண்டு கொள்க.

இராசா, மந்திரி, மேகாதிபதி, தாணியாதிபதி, இவர்கள்

சூரியனாகில் — மழை குறைவு
சந்திரனாகில் — நன் மழை
செவ்வாய் — பஞ்சம், கலகம்
புதன் — காற்றினால் அழிவு
வியாழன் — இரு போகத்திற்குரிய மழை
வெள்ளி — வெள்ளம் மிகுதி
சனி — மழை குறைவு

பஞ்சாங்கத்தில் அவ்வருடத்திற்குரிய நவநாயகரை இலகுவாகக் கண்டு கொள்ளலாம். அல்லாவிட்டால் நாங்களும் இலகுவில் கணிப்பதற்கு:

இராஜா — பங்குனி மாத பூர்வ பக்ஷபிரதமை வாராதிபதி
மந்திரி — சித்திரை மாதப்பிறப்பு வாராதிபதி
சேனாதிபதி — ஆவணி மாதப் பிறப்பு வாராதிபதி
அர்க்காதிபதி— ஆனி மாதப் பிறப்பு வாராதிபதி
ஸஸ்யாதிபதி— ஆடி மாதப் பிறப்பு வாராதிபதி

இரசாதிபதி — ஐப்பசிமாதப் பிறப்பு வாராதிபதி
தானியாதிபதி — மார்கழி மாதப்பிறப்பு வாராதிபதி
நிரசாதிபதி — தைமாதப் பிறப்பு வாராதிபதி
மேகாதிபதி — சூரியன் திருவாதிரைக் கேகும் [வாராதிபதி

கிரகணமும் சுக்கிரமூடமும்

ஆனி, புரட்டாதி, கார்த்திகை, பங்குனி இம்மாதங்களில் கிரகணமும், சுக்கிரமூடமும் நிகழ்ந்தால் செங்கோல் ஆட்சியும், குறைவற்ற மழையும் பெய்து நாடும் செழித்து வாழும்.

சித்திரை, ஆடி, ஆவணி, தை இந்த மாதங்களில் கிரகணமும், வெள்ளி மூடமும் நிகழ்ந்தால் மழையின்றி கன்று காலி நட்டமும் சஞ்சலமும் காட்டும்.

வைகாசி, ஐப்பசி, மார்கழி, மாசி மாதங்களில் கிரகணமும், வெள்ளி அஸ்தமனமும் நிகழ்ந்தால் சம மழையும், சம விளைவும் உண்டாம்.

சித்திரை மாதத்தில் 14, 28 ந் திகதிகளில் மழை பெய்யக்கூடிய அறிகுறிகள் காணப்பட்டால் நன்மழையாம். வைகாசி 12ந் திகதியிலும், வைகாசிமாதத் தேய்பிறைச்சதுர்த்தசியிலும் மழை, மந்தாரம் பரிவேடமும் காணப்பட்டால் அவ்வாண்டு நன்மையாம்.

வைகாசி மாதத்து விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம் இந்த நட்சத்திரங்களில் மந்தாரம், தூறல் பரிவேடம் காணப்பட்டால் முறையே ஆடி, ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் நல்ல மழையாம்.

ஆனி 10ந் திகதியை மேற்கூறியவாறு கவனிக்கவும். ஆடி மாதத்தில் சோதி, விசாகம், அனுஷம் நட்சத்திரங்களில் மழைபெய்யக்கூடிய அறிகுறிகள் தென்பட்டால் முறையே வருடத்தின் முன், இடை, பின் மாரியெனப்படும்.

ஆடிமாதத்துத் தேய்பிறைத் துவாதசியில் மழை பெய்யின் நன்மழையாம்.

ஆடிப் பூரணையன்று பரிவேடம் இரவில் முதல்பத்து நாழிகையில் காணப்பட்டால் புரட்டாதியில் மழையும் நடுப்பத்தில் ஐப்பசியும் கடைசிப்பத்தில் கார்த்திகையிலும் நல்ல மழையாம்.

ஆடிமாதத்து உத்திராடத்தன்று காற்றடிக்கும். காற்றடிக்கும் திசையைக் கொண்டு மழையின் அளவைக் குறிக்கலாம்.

வடகிழக்கு	—	மழையும் விளைவும் உண்டாம்
கிழக்கு	—	மன்னர் கேடும் பின் மழையும்
தென்கிழக்கு	—	களவும், பசியும் மிகும்
தெற்கு	—	பூசல்
தென்மேற்கு	—	பஞ்சம்
மேற்கு	—	மாரியும் விளைவும் பெறும்
வடமேற்கு	—	மரங்கள் உண்டாகும்
வடக்கு	—	வெள்ளக்கேடாம்

ஆவணி மாதம் 1-7ந் திகதிவரை முழக்கமும் இருப்பின் அவ்வாண்டு நல்ல மழையாம். இந்த ஆறுநாளையும் நட்டாச்சா என்று சொல்வார்கள். இதில் விதைக்கக்கூடாது. ஆவணி மூலத்தன்று காலைக் கதிரவனைக் காரிருள் மறைத்தால் அவ்வாண்டு நல்லபோக மழையுண்டு. ஆவணி மாதத்துக் கிருஷ்ணஜயந்தி அன்று மழை, மந்தாரம் இருப்பின் அவ்வாண்டு நல்ல மழை.

கிருஷ்ணஜயந்தி ரோகிணியில் தான் நிகழுமென்பதை வாசகர்கள் ஞாபகத்தில் கொள்ளவும்.

ஐப்பசி மாதம் 7ந் திகதி கிழக்கே மின்னின் ஐப்பசியும் கார்த்திகையும் நன்மழையாம். இதற்குச்சோதி மின்னல் எனப்பெயர்.

கிழங்கு வகை நட

பரணி, கார்த்திகை, மகம், பூரம், விசாகம், மூலம், பூராடம், பூரட்டாதி, நட்சத்திரங்களில திங்கள் வாரத்தில் நட நன்றும்.

உழுந்து, பயறு

ரோகிணி, உத்தரம், சித்திரை, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், உத்தரட்டாதி, ரேவதி இவைகளில் விதைக்கலாம்.

பூசத்தில் வாழை நடுக.

மேடம் இடபம் }	—	பயிர் விருத்தி
சிங்கம்	—	நோயால் கேடு
கன்னி	—	புல்மிகும்
விருச்சிகம்	—	புழு மிகும்
தனு	—	கள்வராற் சேதம்
மகரம்	—	அநேக கஷ்டங்களை உண்டாக்கும்
கும்பம்	—	கலகத்தினால் அழியும்
மீனம்	—	நன்றாகப் பலிக்கும்

கொடிவகை

அசுவினி, மிருகசீரிடம், புநர்பூசம், அத்தம், சித்திரை, சுவாதி அனுஷம், கேட்டை, ரேவதி நட்சத்திரங்களிலும், மேடம், கடகம், துலாம், மகரம் இராசிகளிலும் வியாழக்கிழமைகளிலும் கொடி நடவும்.

வாரபயிர்ச் செய்கை (வகை)

ஞாயிறு	—	நெல்
திங்கள்	—	பூக்கும் பயிர்
செவ்வாய்	—	சிவந்த தானியம்
புதன்	—	கமுகு
வியாழன்	—	பூவும் கனியாகும் மரங்கள்
வெள்ளி	—	பூவும் கனியாகும் மரங்கள்
சனி	—	எள்ளு முதலிய கருந்தானியம்

வெற்றிலைக்கொடி நாட்ட

பூசம், திருவோணம் நட்சத்திரங்களில் வெள்ளிக்கிழமை காலையில் வெற்றிலைக்கொடி வைத்தால் விரைந்து ஓடிப் படரும்.

மனைக் கருகினிற்கத்தகு மரங்கள்

சீதநீர்க்குலைக்காய் தெங்கு செழும்பலாவாழை பூக
மாதுளை திராட்சம் வேம்பு வளரெலுமிச்சைமெவை
தாதனை துளசி சூதந்தக்க வம்பனை நாரத்தை
மிதுறு கொன்றை நாவல் வீட்டின் பானிற்றனன்றே.

ச-மா

தென்னை, பலா, வாழை, கமுகு, மாதுளை, முந்திரிகை, வேம்பு, எலுமிச்சை, துளசி, மா, நல்லமணம் வீசுகின்ற நாரத்தை, கொன்றை, நாவல், முதலியன. இன்னும் தாது மாதுளை, பவள மல்லிகை, முல்லை, பன்னீர்ச் செடி, வீட்டிற் கருகினில் நிற்கலாம்.

மனைக் கருகினிற்கத்தகா மரங்கள்

விண்ணோங்கு மிலவு கோங்கு விளாப்புளி மிளகு கூழா
வண்ணோங்கு மிருப்பை விஸ்வமலரி கார்ப்பாசமச்சந்
தண்ணோங்கு முருங்கை வாகைதாலமமரண்ட மாக்கம்
பண்ணோங்கு மனையினிற்கிற் பாழ்படு மில்லந்தானே.

இலவம், கோங்கு, விளா, புளி, மிளகு, கூழா, இருப்பை, வில்வம், அலரி, அகத்தி, முருங்கை, வாகை, பனை, ஆமணக்கு, எருக்கு, இன்னும் ஆல், அரசு, எட்டி, நெல்லி, முதலியன நிற்கக் கூடாது.

வணங்கும் விதி

திரிமூர்த்திகளுக்கு - சிரசின் மேல் 12 அங்குலம் உயர்த்திக் கை கூப்பி வணங்குதல் வேண்டும்.

மற்றைய தேவர்களுக்கு சிரசின் மேல் கை கூப்பி வணங்குதல் வேண்டும்.

குருவுக்கு நெற்றியில் கைகூப்பி வணங்குதல் வேண்டும்.

அரசர்களுக்கும், பிதாவுக்கும் வாய்க்கு நேர் கை கூப்பி வணகுதல் வேண்டும்.

அந்தணருக்கு மார்பில் கை கூப்பி வணங்குதல் தாய்க்கு வயிற்றில் கைவைத்து வணங்குதல் வேண்டும். தெய்வம், மாதா, பிதா, குரு மாத்திரம் அஸ்டாங்கமும் நிலத்தில் படும்படி வணங்குதல் வேண்டும்.

ஆந்தை அலறல்

ஒரு தரமாயின்	—	சாவு
இரு தரமாயின்	—	எண்ணிய கருமம் நன்றும்
மூன்று தரமாயின்	—	யோகமான மங்கை சேருவான்
நான்கு தரமாயின்	—	வழியில் கலகம்
ஐந்து தரமாயின்	—	பயணம்
ஆறு தரமாயின்	—	விருந்தினர் வரவு
ஏழு தரமாயின்	-	இருந்தபொருள் ஏகும்
எட்டுத் தரமாயின்	—	சாவு
ஒன்பது தரமாயின்	—	உத்தமம்
பத்துத் தரமாயின்	—	உத்தமம்

வஸ்திரம் தரிக்கும் நட்சத்திரப் பலன்

அசுவினி	—	ஆடைப்பேறு, இராசமதிப்பு
பரணி	—	பயம், மனைவிக்குப் பீடை
கார்த்திகை	—	அக்கினி பயம்
ரோகிணி	—	தனலாபம்
மிருகசீரிடம்	—	எலிப்பயம்
திருவாதிரை	—	நாசம்
புநர்பூசம்	—	தனலாபம்
ஆயிலியம்	—	மரணபயம்
பூரம்	—	இராசபயம்
உத்தரம்	—	ஆடைப்பேறு
அத்தம்	—	பொருட்பேறு

சித்திரை	—	வாகனலாபம்
சுவாதி	—	போசன சுகம், விருந்துப் பேறு
விசாகம்	—	சிநேகப் பேறு
அனுஷம்	—	ஆடைப்பேறு
கேட்டை	—	ஆடைகிழிதல்
மூலம்	—	வியாதி
பூராடம்	—	துக்கம்
உத்தராடம்	—	வஸ்திரலாபம்
திருவோணம்	—	வறுமை, கண்ணோய்
அவிட்டம்	—	தனலாபம்
சதயம்	—	மரணபயம்
பூரட்டாதி	—	நோய் மிகுதி
உத்தரட்டாதி	—	ஆடைப்பேறு
ரேவதி	—	நல்வாழ்வு

வஸ்திரம் தரிக்கும் வாரபலன்

ஞாயிறு	—	விரைவில் கெடும், நோய்ப்பெருக்கு
திங்கள்	—	நீரில் நனையும், துக்கம்
செவ்வாய்	—	நோய் மிகும், அக்னிபயம்
புதன்	—	தனலாபம், தனதானியலாபம்
வியாழன்	—	அறிவு விருத்தி, ஆரோக்கியவிருத்தி
வெள்ளி	—	மனமகிழ்ச்சி, ஆடைப்பேறு
சனி	—	அழுக்கடையும், மகாபயம்

வஸ்திரம் தரிக்கும் இராசிப்பலன்

மேடம்	—	இராசபயம்
இடபம்	—	தானியவிருத்தி
மிதுனம்	—	தனவரவு
கடகம்	—	சுபம்
சிங்கம்	—	கேடு
கன்னி	—	தனவரவு
துலாம்	—	நன்மை
விருச்சிகம்	—	துக்கம்

தனு	—	வியாதி
மகரம்	—	சோபனம்
கும்பம்	—	பெருவாழ்வு
மீனம்	—	மரணபயம்

மருந்துண்ணுதற்குரிய நாட்கள்

ஞாயிறு	—	உத்தமம்
செவ்வாய், வியாழன்	—	நன்று
வெள்ளி, சனி, திங்கள், புதன்	—	நோய் மிகும்

சுவர்ப்பிளப்பின் பலன்

கிழக்கு	—	நாசம்
தென்கிழக்கு	—	கலகம்
தெற்கு	—	கேடு
தென்மேற்கு	—	செல்வம்
மேற்கு	—	இருப்புக்குலையும்
வட மேற்கு	—	மரணம்
வடக்கு	—	செல்வம்
வட கிழக்கு	—	நாசம்

புற்றெடுத்தலின் பலன்

நடு	—	சாவுறும்
வட கிழக்கு	—	நோய்
கிழக்கு	—	வாழ்வாம்
தென் கிழக்கு	—	மனையழியும்
தெற்கு	—	பயமுறும்
தென் மேற்கு	—	வாழ்வாம்
மேற்கு	—	புத்திரநாசம்
வட மேற்கு	—	எதிரிகள் தொல்லை
வடக்கு	—	சுகம்

மனைப் பொருத்தம்

மனையின் நீள அகலங்களைப் பெருக்கி 32 அங்குல அளவாகிய சிற்ப அளவால் குழியாக்க வேண்டும். பின்வரும் சோடசப் பொருத்தத்திற்கு அமையுமான குழிக் கேற்ப மனை நிச்சயம் செய்தல் வேண்டும். ஒற்றப்பட்ட குழிக்குத்தான் கெற்பம் நன்ருக அமையும், குழி ஆயம், துருவபதம் என்பன ஒரு பொருளையே குறிக்கும். மனைப் பொருத்தங்கள் சோடசப் பொருத்தங்கள் எனப் 16 வகைப்படும். அவையாவன:-

1. கெற்பப் பொருத்தம்
2. ஆதாயப் பொருத்தம்
3. விரையப் பொருத்தம்
4. யோனிப் பொருத்தம்
5. வாரப் பொருத்தம்
6. நட்சத்திரப் பொருத்தம்
7. திதிப் பொருத்தம்
8. ராசிப் பொருத்தம்
9. வயசுப் பொருத்தம்
10. ஜாதிப் பொருத்தம்
11. அம்சப் பொருத்தம்
12. யோகப் பொருத்தம்
13. கணப் பொருத்தம்
14. நேத்திரப் பொருத்தம்
15. சூத்திரப் பொருத்தம்
16. பஞ்சகப் பொருத்தம்

சோடசப் பொருத்தங்களைக் கணிக்கும் விபரம். முதலாவது கெற்பப் பொருத்தம் குழியை 8 ஆல் பிரித்து வரும் மிச்சம் கெற்பமாம். மிச்சமில்லாவிடின் அவ்வெட்டே மிச்சமெனக் கொள்க. இவ்விதி எல்லாவிடத்தும் பொருந்தும். மிச்சமில்லாவிடின் பிரிக்கும் எண்ணே மிச்சமாம்.

முதலாம்		கெற்பம்		
1.	ஆயின்	கருட	—	உத்தமம்
2.	ஆயின்	புரு	—	மத்திமம்
3.	ஆயின்	சிங்க	—	உத்தமம்
4.	ஆயின்	சுவின	—	அதமம்
5.	ஆயின்	சுப	—	தபம்
6.	ஆயின்	காக்கை	—	நீசம்
7.	ஆயின்	யானை	—	உத்தமம்
8.	ஆயின்	கழுதை	—	அதமம்

9 வது ஆதாயப் பொருத்தம்

மனைக்கு வந்த ஆதாயத்தை 8 ஆல் பெருக்கி 21 ஆல் பிரித்தால் வரும்மிச்சம் ஆதாயமென்க.

1	ஆயின்	—	விஷேசம்
2	ஆயின்	—	விஷேசம்.
3	ஆயின்	—	பாக்கிய விருத்தி.
4	ஆயின்	—	பிரபல கீர்த்தி.
5	ஆயின்	—	தான்ய விருத்தி.
6	ஆயின்	—	தனதான்ய விருத்தி.
7	ஆயின்	—	மங்கள கரம்.
8	ஆயின்	—	மங்கள கரம்.
9	ஆயின்	—	அதி செல்வம்.
10	ஆயின்	—	காரிய சித்தி.
11	ஆயின்	—	ஈசுர அநுக்கிரகம்.
12	ஆயின்	—	சகல நன்மை.

3 வது விரயப் பொருத்தம்

மனைக்கு வந்திருக்கும் ஆயத்தை 9 ஆல் பெருக்கி 10 ஆல் பிரித்தால் வரும் மிச்சம் விரயமாம்.

1	ஆயின்	—	மனைபாழாகும்.
2	ஆயின்	—	அக்கினி பயமுண்டாகும்.
3	ஆயின்	—	குடும்ப சுகம்.
4	ஆயின்	—	புத்திர விருத்தி.
5	ஆயின்	—	விரயமதிகமாகும்.
6	ஆயின்	—	ஆரோக்கியம்.
7	ஆயின்	—	அதிக தரித்திரம்.
8	ஆயின்	—	இலட்சுமி கடாட்சம்.
9	ஆயின்	—	புத்திர நாசம்.
10	ஆயின்	—	மிகுந்த உத்தமம்.

4 வது யோனிப் பொருத்தம்

மனைக்கு வந்த ஆயத்தை 3 ஆல் பெருக்கி 8 ஆல் பிரிக்க வரும் மிச்சம் யோனியாம்.

1	ஆயின்	—	கருடயோனி	—	பாக்கியம்.
2	ஆயின்	—	புகையோனி	—	கலகம்.
3	ஆயின்	—	சிம்மயோனி	—	ஜெயம்.
4	ஆயின்	—	தாவனயோனி	—	பலரோகம்.
5	ஆயின்	—	சர்பயோனி	—	தனம்.
6	ஆயின்	—	கரயோனி	—	தனம்.
7	ஆயின்	—	கஜயோனி	—	மிகுந்தசுபம்
8	ஆயின்	—	கலகயோனி	—	நிஷபலம்.

5 வது வார பலன்

ஆயத்தை 9 ஆல் பெருக்கி 7 ஆல் பிரித்த மிச்சம் வாரம் என்க.

மிச்சம்			வாரம்		பலன்
1	ஆயின்	—	ஞாயிறு.	—	பயம்.
2	,,	—	திங்கள்.	—	இலட்சுமி.
3	,,	—	செவ்வாய்.	—	தன நாசம்.
4	,,	—	புதன்.	—	சுகம்.
5	,,	—	வியாழன்.	—	புத்திர விருத்தி.
6	,,	—	வெள்ளி.	—	பாக்கிய விருத்தி.
7	,,	—	சனி	—	பயமுண்டாம்.

6 வது நட்சத்திரப் பொருத்தம்

மனைக்கு வரும் குழியை 8 ஆல் பெருக்கி 27 ஆல் பிரித்த மிச்சம் நட்சத்திரமாம்.

மிச்சம்		—	நட்சத்திரம்	—	பலன்
1	ஆயின்	—	அச்சுவினி	—	வெற்றி.
2	,,	—	பரணி	—	வறுமை.
3	,,	—	கார்த்திகை	—	அக்கினிபயம்.
4	,,	—	ரோகிணி	—	ஜெயம்.
5	,,	—	மிருகசீரிடம்	—	மிகுந்தஜெயம்.
6	,,	—	திருவாதிரை	—	புத்திர பாக்கி.
7	,,	—	புனர்பூசம்	—	சந்ததிவிருத்தி.
8	,,	—	பூசம்	—	செல்வம்.
9	,,	—	ஆயிலியம்		
10	,,	—	மகம்	—	பசாசுகுடிசேரும்
11	,,	—	பூரம்		
12	,,	—	உத்தரம்		
13	,,	—	அத்தம்	—	நாளுக்கு நாள் ஆக்கம்
14	,,	—	சித்திரை	—	பிணி.
15	,,	—	சுவாதி	—	மிகுசுகம்.
16	,,	—	விசாகம்	—	துன்பம்.
17	,,	—	அனுஷம்	—	கலைவிருத்தி.
18	,,	—	கேட்டை		
19	,,	—	மூலம்	—	குடும்ப விரோதம்.
20	,,	—	பூராடம்		
21	,,	—	உத்தராடம்	—	சுபம்.
22	,,	—	திருவோணம்	—	சௌக்கியம்.
23	,,	—	அவிட்டம்	—	சுபம்.
24	,,	—	சதயம்	—	இலக்குமிவாசம்
25	,,	—	புரட்டாதி	—	தரித்திரம்.
26	,,	—	உத்தரட்டாதி	—	போகபாக்கியம்
27	,,	—	ரேவதி	—	மனையாள்நோய்

1 — நேராக இருத்தல் வேண்டும்.

7வது திதிப் பொருத்தம்

மனைக்கு வந்த ஆயத்தை 9 ஆல் பெருக்கி 30 ஆல் பிரித்த சேடம் திதியாமென்க. திதி பதினைந்துக்குள் ஆனால் பூர்வ பக்ஷம். (16—30) வரை பூர்வ அபர பக்ஷம்.

பலன்கள் இரண்டிற்கும் ஒன்றேயாகும். வரும் திதி பூர்வ பக்ஷமாயின் விசேடமாம்.

1+16 —	பிரதமை —	திவ்விய வர்த்தனை
2+17 —	துதியை —	சுகமுண்டாம்
3+18 —	திருதியை —	ஜய முண்டாம்
4+19 —	சதுர்த்தி —	தோல்வியுண்டாம்
5+20 —	பஞ்சமி —	புத்திரப்பேறு
6+21 —	சஷ்டி —	ஆயுசு விருத்தி
7+22 —	சப்தமி —	நன்மை
8+23 —	அட்டமி —	ரோகமுண்டு
9+24 —	நவமி —	தனநாசம்
10+25 —	தசமி —	சகலபாக்கியம்
11+26 —	ஏகாதசி —	தானியலாபமுண்டு
12+27 —	துவாதசி —	செல்வம்
13+28 —	திரயோதசி —	திருவளரும்
14+29 —	சதுர்த்தி —	மனைபாழாகும்
15+30 —	அமாவாசை —	சகல சம்பத்து
	பூரணை —	,,

8 வது இராசிப் பொருத்தம்

மனைக்கு வந்த குழியை 8 ஆல் பெருக்கி 12 ஆல் பிரித்தசேடம் இராசியாமென்க.

1 ஆயின் —	மேடம் —	சுபம்
2 ,, —	இடபம் —	கீர்த்தி
3 ,, —	மிதுனம் —	மத்திமம்
4 ,, —	கடகம் —	ஜயம்

5 ,, —	சிங்கம் —	வசிகரம்
6 ,, —	கன்னி —	ஞானம்
7 ,, —	துலாம் —	பாக்கியம்
8 ,, —	விருச்சிகம் —	நன்மை
9 ,, —	தனுசு —	சுபம்
10 ,, —	மகரம் —	புத்திர விருத்தி
11 ,, —	கும்பம் —	கஸ்டம்
12 ,, —	மீனம் —	ஐயம்

9 வது வயதுப் பொருத்தம்

மனைக்கு வந்த ஆயத்தை 27ல் பெருக்கி 100 க்குக் கொடுத்து வந்த ஈவே மனையின் ஆயுளாம்,

1 — 45 வரை — அதமம்
45 — 100 வரை — உத்தமம்

10 வது ஜாதிப் பொருத்தம்

ஜாதிப் பொருத்தத்தை வமிசப் பொருத்தமென்று கூறுவாருமுளர். மனையின் குழியை 9 ஆல் பெருக்கி 4 ஆல் பிரிக்க வரும் மிச்சம் ஜாதியாமென்க.

1 ஆயின் —	பிராமண —	மிகுந்த நன்மை
2 ,, —	க்ஷத்திரிய —	சுபம்
3 ,, —	வைசிய —	மிகு உத்தமம்
4 ,, —	சூத்திர —	இது துன்பம்

11 வது அம்சம் பொருத்தம்

மனையின் குழியை 4 ஆல் பெருக்கி 8 ஆல் வகுக்க வரும்மிச்சம் அம்சம் எனப் பெயர் பெறும்.

1 — சூரியன் —	தீமை
2 — சந்திரம் —	பாக்கியம்
3 — செவ்வாய் —	சீலம்
4 — புதன் —	தானிய விருத்தி

5	— குரு	—	இலாபம்
6	— சுக்கிரன்	—	இராஜயோகம்
7	— சனி	—	விரோதம்
8	— இராகு	—	மத்திமம்
9	— கேது	—	சகல நன்மை

12 வது யோகப் பொருத்தம்

மனையின் ஆயாதியில் வந்த வாரமும், நட்சத்திரமும் சேருவதால் உண்டாவது யோகம்.

யோ=சேருதல் யோனி, யோகம், இதைக் குறித்தே வந்தன. இதைச் சுலபமாக அட்டவணையிற் காணலாம்.

அமிர்த யோகம்	—	உத்தமம்
சித்தயோகம்	—	உத்தமம்
மரண யோகம்	—	அதமம்

13 வது கணப் பொருத்தம்

ஆயாதியில் வந்த நட்சத்திரத்திற்குரிய கணத்தை அட்டவணையில் காணலாம். அதற்குரிய கணமும் தலைவன் தலைவியினுடைய நட்சத்திரத்தின் கணமும் பொருந்துதல் வேண்டும்.

தேவ கணம்	—	மனித கணம்	=	உத்தமம்
தேவ கணம்	—	இராட்சத கணம்	=	பகை
இராட்சத கணம்	—	மனிதகணம்	=	மரணம்

14 வது நேத்திரப் பொருத்தம்

மனைக்கு வந்த ஆயாதி வாத்தை ஆதி வாரம் முதல் எண்ணி 3 ஆல் பெருக்கி அத் தொகையை அச்சுவினி முதல் கழித்து மிச்சத்தில் ஆயாதி நட்சத்திரம்

ஒன்பதிற்கும் ஒரு திருஸ்டி என்றும், ஒற்றைக் கண் எனவும் அதற்குமேல் 12 க்கும் இரண்டு கண்கள் எனவும் அதற்கு மேல் 6 க்கும் குருட்டுக்கண் எனவும் காண்க.

இருகண்	—	உத்தமம்
ஒருகண்	—	மத்திமம்
குருட்டுக்கண்	—	அதமம்

15 வது சூத்திரப் பொருத்தம்

மனையின் ஆயத்தை 7 ஆல் பெருக்கி 5 ஆல் பிரிக்க வரும் மிச்சம் சூத்திரமாம்.

1.	பால சூத்திரம்	—	உத்தமம்
2.	யௌவன சூத்திரம்	—	சுபகரம்
3.	கௌமார சூத்திரம்	—	நன்மை
4.	விருத்த சூத்திரம்	—	மத்திமம்
5.	மரண சூத்திரம்	—	அதமம்

16 வது பஞ்சகப் பொருத்தம்

மனையின் ஆயத்திற்கு வந்த வாரம், திதி நட்சத்திரம், இராசி, இவற்றின் தொகைகளைக் கூட்டி 9 ஆல் பிரிக்க வரும் மிச்சம் பஞ்சகமாம்.

1.	மரண பஞ்சகம்	—	அதமம்
2.	அக்கினி பஞ்சகம்	—	அதமம்
3.	நிஷ் பஞ்சகம்	—	உத்தமம்
4.	இராஜ பஞ்சகம்	—	அதமம்
5.	நிஷ் பஞ்சகம்	—	உத்தமம்
6.	சோர பஞ்சகம்	—	அதமம்
7.	நிஷ் பஞ்சகம்	—	உத்தமம்
8.	ரோக பஞ்சகம்	—	அதமம்
9.	நிஷ் பஞ்சகம்	—	உத்தமம்

மேற் கூறிப் போந்த சோடசப் பொருத்தத்தை ஓர் உதாரணமூலம் விளக்கிக் காட்டுவாம்.

மனையின் குழி 21 எனக் கொள்க.

1.	கெற்பம்	= 21÷8	= மிச்சம்	5= சுப
2.	ஆதாயம்	= 21×8÷12	,,	12= ஆதாயம்
3.	விரையம்	= 21×9÷10	,,	9= செலவு
4.	யோனி	= 21×3÷3	,,	7= கஜம்
5.	வாரப்	= 21×9÷7	,,	7= சனி
6.	நட்சத்திரப்	= 21×8÷27	,,	6= திருவாதி
7.	திதி	= 21×4÷30	,,	24= அ. நவமி.
8.	இராசி	= 21×8÷12	,,	12= மீனம்
9.	வயசு	= 21×27÷100	,,	67= 67
10.	ஜாதி	= 21×9÷4	,,	1= பிராமண
11.	அம்சப்	= 21×4÷9	,,	3= செவ்வாய்
12.	யோகப்	= திருவாதிரையும் சனிவாரமும்		சித்தயோகம்
13.	கணப்	= திருவாதிரைக்குரிய		=தேவகணம்
14.	நேத்திர	=		= இருகண்.
15.	சூத்திர	= 21×7÷5	,,	2= குமர
16.	பஞ்சக	= (1+9+6+12) ÷ 9	,,	7= நிஷ்

மனிதர்களிலும் வைத்தியரீதியாக வாத, பித்த, சிலோத்துமமென மூன்று வகையினர்.

சோதிடரீதியாகத் தேவ, மனித, இராஷ்தசணமென மூன்று வகையினர்.

எவரும் தனதுசாணுரல் எண் அளவு கொண்டவர்கள் மனிஷனின் சாண் அளவு மூன்று வகைப்படும்

8 அங்குல சாண்
$8\frac{1}{2}$ அங்குல சாண்
9 அங்குல சாண்

அளவுகளிலும் மூன்றுவிதமான அளவுகள் இருக்கின்றன.

32 அங்குலம் கொண்ட மாநுங்குலமாகும்.
34 அங்குலம் கொண்ட சிதம்பரபதமாகும்.
36 அங்குலம் கொண்ட அரசளவுமாகும்.

அரசாட்சியுமாற அளவுகளும் மாறிவழக்கத்திலிருந்தன
கோல் — செங்கோல்.

Ruler — Rule எல்லாம் அளவையையும் அரசையையும் குறிக்கின்றன.

2 சாண் கொண்ட அளவை முழம் என்பர்.
2 முழம் கொண்ட அளவுதான் கோல்.
4 சாண் கொண்ட அளவை கோல் என்பர்.

கோலெனினும் யார் எனினும் பொருந்தும்.

முற்காலத்தில் எப்படிகுழி கணித்தவர்கள் என்ருல், 4 சாண் கொண்ட அளவையால் தாயறை வீட்டின் பரப்பை அளந்து குழி ஆக்குவார்கள்.

நீளத்திற்கு	=	5 கோல்
அகலத்திற்கு	=	$4\frac{1}{4}$ கோல்
பரப்பு	=	$5 \times 4\frac{1}{4} = 21\frac{1}{4}$ குழி
நீளம்	=	6 கோல்
அகலம்	=	$4\frac{1}{2}$ கோல்
பரப்பு	=	$6 \times 4\frac{1}{2} = 27$ குழி.

தற்காலத்தில் வீட்டின் பரப்பை (32 × 32) சதுர அங்குலங்களால் பிரிக்க குழி பெறப்படும்,

நீளம்	=	16 அடி
அகலம்	=	12 அடி
பரப்பு	=	(16 × 12) சதுர அடி
	=	16 × 12 × 144 ச. அங்.
குழி	=	$\frac{16 \times 12 \times 144}{32 \times 32}$
	=	27 குழி
நீளம்	=	14 அடி
அகலம்	=	10' - 8"
பரப்பு	=	14 × 12 × 128 ச அங்
குழி	=	$\frac{14 \times 12 \times 128}{32 \times 32}$
	=	21 குழி

இதைப்போல் எத்தனை குழிக்கும் கணிக்கலாம்.

வீடு வேய்தல்

ஞாயிறு — தீப்பற்றும்
செவ்வாய் — தீப்பற்றும்
திங்கள், செவ்வாய் — நனைந்துவிடும்
புதன், வியாழன் — வாழ்வு கூடும்

அக்கினி நட்சத்திர (காண்டாவனம்) த்திலும் வீடு வேய்தல் தீது. தீப்பற்றும் என்பது முழு வழக்கம்.

காண்டாவனத்திலும், திருக்கணிதத்திற்கும் வாக்கியத்திற்கும் வித்தியாசம் இருக்கின்றது சர. சோதி மாலையில் காணப்படுகின்ற செய்யுளின்படி வாக்கியத்தில் காண்கிறோம்.

"தருமனாலாங்காலிற் சுழல் இருள் முதல் கால் தன்னில்
பரிதி தானிற்கும் காலம் பாவக நாளதாகும்.
— சரசோதி

தருமன் — பரணி
தழல் — கார்த்திகை
உருள் — ரோகிணி
பரிதி — சூரியன்

வீடு மெழுகல் வீடு கழுவல்

சனி, ஞாயிறு, செவ்வாய் — பொருள் நாசம்
திங்கள், புதன், வெள்ளி — மென்மேலும் செல்வம் பெருகும்.
வியாழன் — பொன், பொருள் அழிவு

செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் பாண்டங்களை வெளியில் எடுத்துப்போடக்கூடாது. செவ்வாய்க்கிழமைகளில் சுவர் மெழுகல், ஒட்டடை அடைதல் கூடாது

சயன லட்சணம்

குரு, தெய்வம், அக்கினி, பசு, பிராமணர், இவர்களுக்கு எதிரில் கால் நீட்டி படுத்தல் கூடாது. வளைக்கு நேராகவும், வடக்கே தலைவைத்தல் அக்கினி, நெல்லு, விதை தானியங்கள், வணங்கக் கூடிய பொருள்களுக்கு மேலாகவும் சயனிக்கக் கூடாது. அப்படிச் சயனிப்பின் பொருள், அருள் கெடும்

உறங்கும் திசையறிதல்

கிழக்கு — சகல சம்பத்துண்டாம்
மேற்கு — மத்திமம்
வடக்கு — வாணாள் குன்றும்
தெற்கு — ஆயுள் விருத்தி

கோணத்திசைகள் எதுவாகிலும் தலைவைத்துப் படுக்கக்கூடாது.

கிடக்குங்கால் கை கூப்பித் தெய்வந் தொழுது "வடக்கொடு கோணம் தலை செய்யார்" மீக்கோன் உடல் கொடுத்துச் சேர்த்தல் வழி - ஆசாரக்கோவை "வடக்கே தலை வையாதே வாசலுக்குக் கால் நீட்டாதே". — பழமொழி

ஆபரணம் பூண

வாரம்

திங்கள், புதன், வியாழன், வெள்ளி.

திதி

பிரதமை, சட்டி, பஞ்சமி, தசமி, பூரணை.

இராசி

இடபம், மிதுனம், கன்னி, தனு, மீனம், இராசிகள் மிக நன்று.

மு. கவனிப்பு

சனிக்கிழமையும் ரோகிணியும் கூடிய நாளில் அமிர்த கடிகை நேரத்தில் அணிந்தால் அதிக அழகான ஆபரணங்களும் மிகுந்த செல்வமும் வந்து சேரும்.

வாகனம், சங்கீதக் கருவிகள், உடைகள், அணி கலன்கள் முதல் முறை உபயோகிப்பதற்கு வெள்ளி மூலத்திரிகோணம், ஆட்சி, உச்சம் இடங்களில் இருக்கவேண்டும்.

நட்சத்திரம்

அசுவினி, ரோகிணி, மிருகசீரிடம், புனர் பூசம், பூசம், மகம், உத்திரம், அத்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், உத்தராடம், திருவோணம், உத்தரட்டாதி ஆகிய இந் நட்சத்திரங்களில் பூண நல்லனவாம்.

மயிர்களைய

ஞாயிறு	—	பிணி
திங்கள்	—	அழகு
செவ்வாய்	—	ஆயுள் குன்றும்
புதன்	—	அரசர் மதிப்பு
வியாழன்	—	வாழ்வுண்டாம்
வெள்ளி	—	வாழ்வுண்டாம்
சனி	—	கேடு

ஆண்கள் வளர்பிறையில் மயிர்வெட்டக் கூடாது. பலக்குறைவு காட்டும் பெண்கள் வளர்க்கும் பொருட்டு வெட்டலாம். ஆடி, புரட்டாதி, ஐப்பசி, மார்கழி மாதங்களில் தலைமயிர் வெட்டக்கூடாது.

எண்ணெய் வைக்க

ஞாயிறு	—	அழகு போகும்
திங்கள்	—	பொருள் சேரும்
செவ்வாய்	—	ஆபத்து நேரிடும்
புதன்	—	புத்தி விசேஷம்
வியாழன்	—	அறிவழியும்
வெள்ளி	—	பொருள் நஸ்டம்
சனி	—	சம்பத்துண்டாம்

சனி நீராடு — ஆத்திசூடி

மற்றும் வாரங்களில் எண்ணெய் வைக்க வேண்டுமெனின் பின்வரும் பொருட்களை அவ்வவ்வாரத்திற்கு சேர்த்து வைக்கவும்.

ஞாயிறு	—	அலரி
செவ்வாய்	—	மண்
வியாழன்	—	அறுகு
வெள்ளி	—	விபூதி

இல்லாவிடின் எண்ணெய் வைக்குமுன்னர் மூன்று துளிகள் நிலத்தில் ஊற்றிவிட்டு வைக்கலாம்.

நெருப்பு

வீட்டில் அடுப்பிலுள்ள நெருப்பையாவது, அல்லது வேறு எந்தவிதமான அக்கினிச்சுடர், சுவாலையாவது வாயினால், நீரினால் அணைத்தல்கூடாது. ஆபத்தான, துக்ககரமான காரியங்களுக்கு நீரைப் பாவிக்கலாம். வீட்டில் நெருப்பு பற்றிய காலை நீரினால் அணைக்கலாம். இறுதிக்காலத்தில் சுடலையில் இந்த முறைப்படி செய்யும் ஈமச் சடங்கிற்கு நீரினால் அக்கினியை அணைப்பதால் காடாற்று எனப்படும். எங்கள் உடம்பில் உள்ள நெருப்பிற்கு ஜடராக்கினி என்று பெயர். இது உடம்பை விட்டுப் பிரிந்ததும் பிரேதம் என்கின்றோம்.

நெருப்பாலே பாதுகாத்த உடம்பை நெருப்பிற்கு கடைசியில் கொடுக்கின்றோம். இதற்கு அந்தியேஸ்டி என்று பெயர். உயிரைப் பாதுகாக்கவும். உணவை ஆக்கவும், இருளகற்றவும் உதவும் அக்கினியை, நாம் எவ்வாறு போற்றினும் இணையாகாது.

உண்ணுவதற்கு முன்னர் சூரியன், அக்கினி, விளக்கு என்பனவற்றை வணங்கி விட்டுத்தான் உண்ணல் வேண்டும்.

"உடம்பு நன்றென்றுரையான் ஊதார் விளக்கும்
அடுப்பினுள் தீ நந்தக் கொள்ளார் — அதனைப்
படக்காயா தம்மேல் குறித்து."

ஆசாரக்கோவை.

இல்லக் கிழத்தியர் இல்லம் பொழியச் செய்வன

வைகறையில் துயிலெழுந்து இல்லத்திலுள்ள குப்பை கூளங்களைக் களைந்து பாசனங்களைக் கழுவி, மனையைச் சாணத்தினாலே தெளித்து, நீர்சால் கரகங்களை மலரணிந்து அதன் பின்பு தீயை மூட்டுதல் வேண்டும்.

காட்டுக் களைந்து கலங்கழிகி இல்லத்தை
ஆப்பி நீர் எங்கும் தெளித்துச் சிறு காலை
நீர்ச்சால் கரகம் நிறைய மலரணிந்து
தில்லம் பொலிய அடுப்பினுள் தீப்பெய்க
நல்ல துறல் வேண்டுவார்.

ஆசாரக் கோவை

மனைகோல வார பலன்

திங்கள் — நன்மை
செவ்வாய் — கலகம்
புதன் — அழகாகக் கட்ட ஏற்படும்
குரு — பிரபுக்கள் உதவி
வெற்றி — அலங்காரப் பொருள் சேர்க்கை
சனி — தாமதம் ஏற்படும்
ஞாயிறு — அரசர் தொல்லை.

நட்சத்திரம்	ஞா.	தி.	செ.	பு.	வி.	வெ.	ச.
அசுவனி	சி.	சி.	சி.	ம.	அ.	அ.	சி.
பரணி	பி.	சி.	சி.	சி.	சி.	சி.	சி.
கார்த்திகை	சி.	ம.	சி.	அ.	ம.	சி.	அ.
ரோகணி	சி.	அ.	அ.	சி.	ம.	ம.	அ.
மிருகசீரிடம்	சி.	அ.	சி.	சி.	ம.	சி.	சி.
திருவாதிரை	சி.	சி.	ம.	சி.	ம.	சி.	சி.
புனர்பூசம்	சி.	அ.	சி.	சி.	அ.	சி.	சி.
பூசம்	சி.	சி.	சி.	சி.	அ.	ம.	சி.
ஆயிலியம்	சி.	சி.	சி.	சி.	சி.	ம.	ம.
மகம்	ம.	ம.	சி.	சி.	அ.	ம.	அ.
பூரம்	சி.	சி.	சி.	அ.	சி.	சி.	சி.
உத்திரம்	அ.	சி.	அ.	அ.	ம.	சி.	ம.
அத்தம்	அ.	சி.	சி.	ம.	சி.	அ.	ம.
சித்திரை	சி.	பி.	சி.	சி.	சி.	சி.	ம.
சுவாதி	சி.	அ.	சி.	சி.	அ.	சி.	அ.
விசாகம்	ம.	ம.	ம.	சி.	சி.	சி.	சி.
அனுஷம்	ம.	சி.	சி.	சி.	சி.	சி.	சி.
கேட்டை	ம.	சி.	சி.	சி.	பி.	ம.	சி.
மூலம்	அ.	சி.	அ.	ம.	கி.	அ.	சி.
பூராடம்	சி.	சி.	சி.	அ.	சி.	பி.	சி.
உத்தராடம்	அ.	ம.	பி.	அ.	சி.	சி.	சி.
திருவோணம்	அ.	அ.	சி.	சி.	சி.	ம.	சி.
அவிட்டம்	ம.	சி.	சி.	பி.	சி.	சி.	சி.
சதயம்	சி.	சி.	ம.	சு.	ம.	சி.	அ.
பூரட்டாதி	சி.	ம.	ம.	அ.	சி.	சி.	ம.
உத்தரட்டாதி	அ.	சி.	அ.	சி.	சி.	சி.	சி.
ரேவதி	அ.	சி.	சி.	ம.	சி.	அ.	பி.


சி. — சித்த யோகம்
ம. — மரண யோகம்
அ. — அமிர்த யோகம்
பி. — பிறந்த நாள்

ஒரு காணியை நான்கு பக்கத்து எல்லைகளையும் பிழையின்றி அளத்தல்வேண்டும்.

சதுரக்காணி	—	உத்தமம்
நீள்சதுரக்காணி	—	மத்திமம்
அதிநீளக்காணி	—	அதமம்

அதி நீளக்காணியை சிறப்புச் சொல்லால் கொடுக்கான், கோவணக் காணி என்பர்.

காணியையும், கிரகநிலைக் கோட்டையும் ஒரே மாதிரி சிந்தித்து வகுத்தல்வேண்டும். கிழக்குப் பக்கத்து வடகிழக்கு எல்லையிலிருந்து மீனம் முதலாக முறையே இராசிகளைக் கணித்தல் வேண்டும்.



காணிக்கு வடக்கு வாயில் எப்படிக் கோலுதல் என விளக்குவாம் :

காணியின் தென்மேற்கு மூலையிலிருந்து நாலில் ஒன்று (¼) மேற்குப் பக்கத்தில் எல்லை இருந்து ஒரு குறிப்பு எடுத்து நிலத்தில் கீறல் வேண்டும்.

பின்னர் தென்மேற்கு மூலையில் தெற்குப் பக்கத்து எல்லையிலிருந்து எட்டில் ஒருபங்கு ($\frac{1}{8}$) குறித்துவிடல் வேண்டும். இரண்டு குறிப்பு சந்திக்குமிடம் கர்ப்பப்பேழை வைத்தல் அதாவது அத்திவாரக்கல்லு நடுதல், சங்கு வைத்தல் முதலியனவாம்.

இதற்கு பச்சை வேப்பந்தடியால் குறித்த இடத்தில் அடித்தல்வேண்டும். இதுவும் அடித் தடி கீழேயும் நுனித் தடி மேலேயாகவும் அடித்தல். அடிக்கும்பொழுது தடி பிளக்கவோ, முறியவோ கூடாது. அப்படி நேரின் அந்த நிலையத்தையாவது காணியாவது விலக்கிவிடல் வேண்டும்.

கிழக்கு வாயில் விட்டுக்கு :

காணியின் கிழக்கு மேற்கு எல்லையின் எட்டில் ஒன்றை ($\frac{1}{8}$) குறித்து அந்த குறிப்பை எடுக்கவும். வடக்குத் தெற்கு எல்லையின் ($\frac{1}{2}$) அரைவாசியை தெற்கிலிருந்து குறிப்பைக் குறிக்கவும். இரண்டும் சந்திக்குமிடம் கிழக்கு வாயில் வீட்டுக்கு கருப்பம வைப்பதாகும்.

மேற்கு வாயில் விட்டுக்கு :

கிழக்கு மேற்கு எல்லையின் அளவின் ($\frac{1}{8}$) எட்டில் ஒரு பாகத்தைக் குறித்து வைக்கவும். வடக்கு தெற்கு எல்லையின் நீளத்தில் ($\frac{1}{4}$) நாலில் ஒருபங்கின் குறிப்பைக் குறிக்கவும். இரண்டும் சந்திக்குமிடத்தை எடுக்கவும். இதிலிருந்து வீட்டின் அகலத்தை மேற்கு நோக்கி அளந்து வரும் இடத்தில்தான் மேற்கு வாயிலுக்கு கருப்பம் வைப்போம்.

தெற்கு வாயில் வீட்டுக்கு :

கிழக்கு மேற்கு நீளத்தின் அரைவாசியை ($\frac{1}{2}$) மேற்கிலிருந்து குறிக்கவும். பின் வடக்கு தெற்கு நீளத்தின் ($\frac{1}{8}$) எட்டிலொன்றை வடக்குப் பக்கத்து எல்லையிலிருந்து குறிக்கவும். இரண்டும் சந்திக்குமிடத்தை குறித்து வைக்கவும். இதிலிருந்து தாயறை வீட்டின் அகலத்துக்கு தெற்குப் பாகமாகக் குறிக்குமிடந்தான் தெற்கு வாயிலுக்குக் கருப்பம் வைக்குமிடம்.

மனைகோல தூரமறிதல்

ஆற்றங் கரைக்கும், குளக்கரைக்கும், ஊருணிக்கும் 50 அடிக்கு அப்பாலும் கிணற்றுக்கு 17 அடிக்கப்பாலும் கோவில் தெருச் சந்திகள் 100 அடிக்கு அப்பாலும் வீடு அமைத்தல் நன்றாம்.

மனைகோலும் பொழுது மண்வெட்டி முனை முறிந்தாலும், வளைந்தாலும், கயிறு அறுந்திடினும் தலைவனுக்கு மனைப் பயமும், அரசரால் ஆபத்தும், கள்வனென பெயர் கேட்கச் செய்யும்.

உண்ணுந் திசை

கிடந்துண்ணார் நின்றுண்ணார் வெள்ளிடையும் உண்ணார்
சிறந்து மிகவுண்ணார் கட்டின் மேல் உண்ணார்
இறந்தொன்றும் தின்னற்க நின்று,
நோயாளிகள் தான் கிடந்தும்,
கட்டிமேனின்றும் உண்ணுவர்
வெளியிடத்திலும் நின்றும் உண்ணக்கூடாது
வடக்கொழிந்த திக்குகளைத் தவிர்த்து மற்றைய திக்கு
களை நோக்கி உண்ணலாம்.

நீண்ட காரியத்திற்கு மேற்கென்பர் மேன்மையோர். கும்பிடுதல், உலைவாய் சரித்தல், தாலி கட்டுதல் போன்றனவற்றுக்கு மேற்கு சாலச் சிறந்தனவாம்.

உண்டி, உறக்கம் முதலியனவற்றுக்கு மேற்குத் திசையாயின் நீண்டதாகிவிடும் என்பர்.

பந்தல்

விழாக் காலங்களிலும், திருமண வைபவங்களிலும் பந்தல்க்கால், கன்னிக்கால் நாட்டுதல் என்ற முகூர்த்தம்

ஒன்று உண்டு. மங்களகரமானதற்குக் கொட்டகைப் பந்தலும், அமங்கலகரமானதற்குத் தட்டிப்பந்தலும் அமைப்பார்கள். இன்றோ, மங்களகரத்துக்கும் அமங்கலத்துக்கும் வித்தியாசம் தெரியாத முறையில் அமைப்பு, ஒலி, ஒளி முதலியவற்றை மலியக் கைக்கொள்ளுகின்றார்கள். பொது மண்டபங்களில் திருமணமும் பொது மரணச்சடங்குகளும் நடைபெறுகின்றன.

சரி, பிழை ஆராய்தற்குரியது. மண்டபத்தின் முகட்டை மாற்ற முடியாது. தோரணங்களில் அமைக்கும் எண்ணிக்கையில் வித்தியாசம். மங்கலத்திற்கும் அமங்கலத்திற்கும் தெரிவிக்கின்றன. தற்பொழுது எல்லாம் ஒன்றாகத் தோன்றுகின்றன.

மங்களப் பந்தலில் காணக்கூடாத பொருட்கள் :

துடைப்பம், பூவின்புறவிதழ், பழைய கரிப்பானை, கிழிந்த தலையணை மெத்தை, உடைந்த கட்டில், குப்பை முதலியன.

மனைக்கு அடிக்கணக்கும், தேவர்களுக்கு அங்குலக் கணக்கிலும் கணித்தல் வேண்டும். இதில் அடிக்கணக்கில் ஒவ்வொரு நூலும் சில அடிகளுக்கு ஒவ்வொரு விதமாகப் பலன் கூறுகின்றது.

கூறும் நூல்களின் பட்டியலும் அடிக்கு கூறும் பலனை நல்லதற்குச் சரி (ச) என்றும், கூடாததற்கு (பி) என்றும் வாசகர்களுக்கு விளங்குமாறு கொடுபட்டிருக்கின்றது. எனது அடிக்கணக்கின் பலாபலனில் (6 முதல் 71 வரை) எமது குருவின் விளக்கத்துடன் ஆராய்ந்து அநுபவத்தில் கண்ட உண்மையாகும்.

60' அடி கூடாது. எமது குரு இதனை அறுவதெனக் கூறுவர். இதே அளவில் அமைந்த இரு தொழிற்சாலைகள்


முடப்பெற்று இருந்த பொருள் யாவும் தொலைந்துவிட்டன. 66' அடி – பூபதி யோகம் என குரு கூறுவர். எப்பவோ 66' அடி அளவுள்ள ஒரு வைத்தியர் உண்டு. அவர் ஆக்குவித்த மற்ற ஏனைய வீடுகளுக்கும் ''பதி''இல் இல்லப் பெயரிருப்பதைக் காணலாம்.

எமது குருவுடன் நெருங்கிப் பழகியவரும், பல கட்டிடங்களைக் கட்டியவருமாகிய வட்டுக்கோட்டை, திரு. நாகலிங்கம் அவர்களிடம் இருந்து பல அடிகளின் பலனை அறிந்தும், அவரமைத்த இல்லங்களின் அளவுகளை அளந்தும் அநுபவப்பட்டதேயாகும். இந்த உதவிகளைப் புரிந்த திரு. நாகலிங்கம் அவர்களுக்கு எமதும் வாசகர்களினதும் நன்றி உரித்தாகுக.

இந்நூல் எழுதுதற்கு துணையாக இருந்த நூல்களின் விபரம்.

1. சிற்பக் களஞ்சியம்
2. மனையலங்காரம்
3. சிற்ப சாகரம்
4. மனையடி சாஸ்திரம்
5. சர்வார்த்த சிந்தாமணி
6. சிற்ப சிந்தாமணி
7. மனைவிதி விளக்கம்
8. மயநூல்
9. ஸ்ரீ லலிதா நவரத்தினம் 1ம் பாகம்
10. ,, ,, 2ம் பாகம்
11. சிற்ப ரகசியம்
12. ஆயாதிப் பொருத்தம்
13. காகபுஜண்டர் மனையடி சாஸ்திரம்
14. திருக்கணித பஞ்சாங்கம்

15. நந்தி வாக்கியம்
16. சரசோதி மாலை
17. கந்தராருடம்
18. காலவிதானம்
19. பிருகு சம்கிதா 1வது பாகம் ஆங்கிலம்
20. ,, 2வது பாகம் ,,
21. காலாமிருதம் ,,
22. விதானமாலை
23. நீங்களும் வீடுகட்டலாம்
24. மயமதம்
25. சில்பரத்தினம்
26. சோதிட இலக்கணக் கோவை
27. தி. அ. செல்வத்துரை கொடுத்துதவிய கையெழுத்துப் பிர
28. பெரிய வருசாதி நூல்
29. சுக்கிர நீதி
30. சோதிட கோட்சார சிந்தாமணி
31. சிற்பநூல் பொக்கிஷம்
32. அருட்கொடி சிற்ப சாத்திரக் கண்ணாடி
33. சோதிட இரத்தின சேகரம்
34. சுக சந்தர்சன தீபிகை
35. அபிதான சிந்தாமணி
36. Royal Asiatic Journal
37. ஆசாரக்கோவை
38. சிற்பசாரம்



'ம'

என்பதும் பாதுகாப்பு பெருக்கத்தை தெரிவிக்கின்றது. மனை, மருந்து, மழை, மயிர், மழலை என்பன போன்ற சொற்களால் நன்கறியலாம். மனையைப்போல் மக்கள் உதவாது என்பது பழமொழி. இதில் கருத்து வெளியாகின்றன. வீட்டைப்போல் பிள்ளைகள் உதவாது எனவும், மனைவியைப்போல் பிள்ளைகள் உதவாது எனவும் மனைக்கு பெண், வீடு என பொருள் புலனாகின்றது. இத்தகைய மனைக்கு நிலம்வகுத்தும் பிழைகளை திருத்தி அதனால் ஆக்கம் உண்டாக்கியும் மக்களிடம் நன்மதிப்பு கொண்ட,

திரு. என். கே. சுப்பிரமணியம்



உவர் நிலத்திலும் நன்னீரை நன்கறியும் நங்கை ஆக்கியோனின் மனைவி.

இவர் உவர் நிலப்பகுதிகளில் நன்னீர் எடுத்து கொடுத்த கூவல்களின் (Well) எண்ணிக்கை பலவாகும்.

திருமதி தங்கேசுவரி